# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

வெள்ளிக்கிழமை 31.12.2021 | supeedsam.com | supeedsam@gmail.com







# "நிர்வாக பயங்கரவாதம்"

## நஸீர் அஹமட் எம்.பி.யின் கருத்துக்கு முன்னாள் அரசாங்க அதிபர் கடும் கண்டனம்



(ரக்ஸனா)

புதன்கிழமை (29) இரவு தொலைக் காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஹாபிஸ் நஸீர் அஹமட் அவர்கள் புள்ளி விபரங்களை பயன்படுத்தி முன்வைத்த பல விடயங்கள் உண்மைக்கு புறம்பானவை என்பதுடன் மாவட்டத்தில் நிர்வாக பயங்கரவாதம் நிலவுவதாகவும் , அரச உத்தியோகத்தர்கள் முஸ்லீம் மக்களது காணிகளை களவாடியதாகவும் , கிராம சேவகர் பிரிவுகளை துண்டாடியதாகவும் தெரிவித்த கருத்துக்களானது வன்மையாக கண்டிக்கத்தக்கதாகவும் மக்களை ஏமாற்றுகின்ற செயற்பாடாகவும் கருதவேண்டி உள்ளது என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள்

02 ஆம் பக்கத்தில்...

## சம்பந்தன், மனோ, ஹக்கீம் இன்று சந்திப்பு



(ராஜ்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசுக்கும் இடையில் சந்திப்பொன்று இன்று வெள்ளிக்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இரா.சம்பந்தன் தலைமையிலான குறித்த குழுவில் சித்தார்த்தன்,

02 ஆம் பக்கத்தில்...

## பால்மா விலை மீண்டும் அதிகரிப்பு

(ஊர்காவலன்)

இறக்குமதி செய்யப்படும் பால்மாவின் விலை இன்று முதல் அதிகரிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பால்மா இறக்குமதியாளர்கள் சங்கம் இதனை அறிவித்துள்ளது.

அதற்கமைய, 400 கிராம் பால்மா பொதியொன்றின் விலை 60 ரூபாயினாலும், ஒரு கிலோகிராம் பால்மா பொதியொன்றின் விலை 150 ரூபாயினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோகிராம் பால்மா 1,345 ரூபாய்க்கும், 400 கிராம் பால்மா 540 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படும் எனப் பால்மா இறக்குமதியாளர்கள் சங்கம் கூறியுள்ளது.

## இராணுவ ஆட்சியை கோண்டு வரவே ஞானசார தேரர் கோண்டுவரப்பட்டார்

(ஜுட்)



நாட்டில் இராணுவ ஆட்சியை கொண்டு வருவதற்கு, கோட்டா பயன்படுத்திய ஆயுதமே ஞானசார தேரர் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஜனநாயகம் பேசினால் சிறையில் அடைக்கும் ஆட்சியின் கீழ் நாம் வாழ்கின்றோம்.

02 ஆம் பக்கத்தில்...

## மகிந்தவின் ஆட்சியை கலைக்க முடியாது நம்பிக்கை வெளியிட்ட பீரிஸ்

(காந்தன்)



இலங்கை பொதுஜன முன்னணியின் தலைவராகவும் இந்த அரசின் பிதாமகனாகவும் பிரதமர் மஹிந்த ராஜபக்சவே உள்ளார் எனவும் அவர் தலைமையிலான ஆட்சியை இனி ஒருபோதும் கலைக்கவும் முடியாது, கவிழ்க்கவும் முடியாது எனவும் பொதுஜன முன்னணியின் தவிசாளரும் வெளிவிவகார அமைச்சருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

'மொட்டு' அரசு விரைவில் கவிழும் என்று சஜித் பிரேமதாச தலைமையிலான எதிரணியினர்

02 ஆம் பக்கத்தில்...

## அமைச்சுப்பதவிகளை துறக்க வேண்டிய நிலை ஏற்பட்டால் தயக்கமின்றி தீர்மானம் எடுப்போம்

### விமல்,கம்மன்பில,வாசுதேவ அறிவிப்பு



(காந்தன்)

அமைச்சரவை கூட்டுப்பொறுப்பை ஒருபோதும் நாம் மீறவில்லை. அமைச்சரவையில் விவாதிக்க வேண்டிய விடயங்களை வெளியில் விமர்சிப்பது அமைச்சரவை கூட்டுப்பொறுப்பை மீறும் செயற்பாடு என்றால், அமைச்சரவையில் இரகசியமான தீர்மானங்களை முன்னெடுப்பதும்

02 ஆம் பக்கத்தில்...






## தமிழ்- முஸ்லிம் ஒற்றுமைக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தடை

(காந்தன்)

அரசியல் கோரிக்கைகளை வென்றெடுப்பதற்காக தமிழ் பேசும் கட்சிகளின் ஒன்றிணைந்த முயற்சிகளுக்கு எதிராக ஸ்ரீலங்காவின் ஆளும் அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியொன்று கருத்து வெளியிட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைக்க வேண்டும் என்ற தமிழ் அரசியல்

02 ஆம் பக்கத்தில்...

## மீண்டும் வடக்குக்கு இடமாறும் நீதிபதி இளஞ்செழியன்

அடுத்தாண்டுக்கான வடக்கு, கிழக்கு மாகாண மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கான இடமாற்றம் அமுலுக்கு வரவுள்ளது.

தலைமை நீதியரசரினால் வழங்கப்படும் இந்த இடமாற்றம் எதிர்வரும் ஜனவரி ஐந்தாம் திகதி முதல் அமுலுக்கு வரவுள்ளது. யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர், திருகோணமலை குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதியாக இடமாற்றப்பட்டுள்ளார்.

திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன், வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதியாக இடமாற்றப்பட்டுள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...









## காணாமல் போன சிறுவர்கள் போதுமக்களின் உதவியை நாடும் போலிஸார்

கொடதெணியாய பொலிஸ் பிரிவின் வத்தேமுல்ல பாந்துராகொடை பிரதேசத்தை சேர்ந்த உறவுமுறை சிறுவர்கள் இருவர் கடந்த 23 ஆம் திகதி காணாமல் போயுள்ளனர்.

10 மற்றும் 12 வயதுடைய இரண்டு சிறுவர்களே இவ்வாறு காணாமல் போயுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸாருக்கு இதுவரை எவ்வித

02 ஆம் பக்கத்தில்...

# பதவி இழந்ததாக செய்திகள் வெளியான போதிலும் சபை நடவடிக்கைகளில் வழமைபோன்று பங்குபற்றினார்

(ரக்ஸனா)



கட்சிக்கு எதிராக செயற்பட்டதால் ஏறாவூர் நகர சபையின் பிரதித் தவிசாளர் ரெபுபாசத்தை, கட்சியிலிருந்தும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர் பதவியிலிருந்தும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அவரை நீக்கியுள்ளதாக கடந்த ஞாயிறன்று 26.12.2021 செய்திகள் வெளியாகியிருந்தது.

இருப்பினும் வியாழக்கிழமை 30.12.2021 இடம்பெற்ற ஏறாவூர் நகர சபையின் 45வது மாதாந்தக் கூட்டத்தில் அவர் வழமை போன்று பங்குபற்றினார்.

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சார்பாக போட்டியிட்டு தோல்வியடைந்த எம்.எல். ரெபுபாசம், பட்டியல் ஆசனத்தினூடாக ஏறாவூர் நகர சபைக்குத் தெரிவு செய்யப்பட்டவராவார்.

நகர சபைத் தவிசாளர் தெரிவின்போது கட்சியினுடைய தீர்மானத்தை புறக்கணித்தும் கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது கட்சியின் கொள்கை மற்றும் நடவடிக்கைகளுக்கு எதிராகவும் செயற்பட்டதால் அவருக்கெதிராக சுதந்திரக் கட்சி ஒழுக்காற்று விசாரணைகளை மேற்கொண்டது.

மேற்படி ஒழுக்காற்று விசாரணைகளின் தீர்ப்பையடுத்து ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு, அவரது கட்சி உறுப்புரிமையை இரத்துச்செய்து கட்சியில் இருந்தும் அவரை வெளியேற்றியுள்ளது என்று கடந்த ஞாயிற்றுக்கிழமை செய்தி வெளியாகியிருந்தது.

இதன்படி, ஏறாவூர் நகர சபையில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் இந்த உறுப்பினரின் பதவி நீக்கப்பட்டமை குறித்து, அதற்கான வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுமாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர, மட்டக்களப்பு மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலருக்கு கடிதம் ஊடாக அறிவித்திருந்தார்.

இவ்வாறான நிலையில் அவர் வியாழக்கிழமை 30.12.2021 ஏறாவூர் நகர சபையின் தவிசாளர் எம்.எஸ். நழிம் தலைமையில் இடம்பெற்ற அச்சபையின் 45வது அமர்வில் பங்குபற்றியிருந்தார்.

## "நிர்வாக பயங்கரவாதம்"

அரசாங்க அதிபர் மாணிக்கம் உதயகுமார் தெரிவித்துள்ளார்.

அறிக்கை ஒன்றின் ஊடாக அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது இலங்கை நிர்வாக சேவையின் சிரேஷ்ட உத்தியோகத்தராக மாவட்ட நிர்வாகத்தில் நீண்ட காலம் பணியாற்றியவன் என்ற வகையில் நிர்வாக நடைமுறைகளை இங்கு பகிர்ந்து கொள்வது பொருத்தமானது என கருதுகிறேன். இலங்கை ஆங்கிலேயர் காலம் முதல் நிர்வாக நடவடிக்கைகளுக்காக பல்வேறு நிர்வாக அலகுகளாக பிரிக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டு வந்துள்ளன. காலத்துக்கு காலம் இவ்வலகுகளில் மாற்றங்களும் செய்யப்பட்டுள்ளன. தற்போதைய நடைமுறைகளின்படி இலங்கையின் புவியியல் நிலப்பரப்பானது கிராம சேவகர் பிரிவுகள், பிரதேச செயலாளர் பிரிவுகள், மாவட்டங்கள், மாகாணங்கள், என வரையறுக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டு வருவது யாவரும் அறிந்ததே.

இவ்வாறான நிர்வாக அலகுகளில் மாற்றங்கள் செய்யவேண்டிய தேவைகள் ஏற்படின், அதற்கான கோரிக்கைகள் பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு முன்வைக்கப்படுதல் வேண்டும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் ஜனாதிபதி அவர்கள் தேசிய எல்லை நிர்ணய குழுவொன்றினை (மீச்ணுடிணிணைச் ஈனுடேடிட்டிஞச்ணுடிணிண ஞிணிட்டிட்டி ஞணுனுனு) அமைப்பதுடன் சம்மந்தப்பட்ட அமைச்சினால் எல்லை நிர்ணய உபகுழு (ஈனுடேடிட்டிஞச்ணுடிணிண ண்தஞ ஞிணிட்டிட்டி ஞணுனுனு) ஒன்று அமைக்கப்படும். இக்குழுக்கள் குறிப்பிட்ட பிரதேச பொது அமைப்புக்கள், மக்கள் பிரதிநிதிகள், மதத்தலைவர்கள், பொதுமக்கள் என அனைத்து தரப்பினரது கருத்துக்களை பெற்று எல்லை நிர்ணயத்துக்கான தேவை, அதற்கான பரிந்துரைகளை ஜனாதிபதி அவர்களுக்கும் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சருக்கும் சமர்ப்பிக்கப்பட்டு அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுதல் வேண்டும். அதன்பின்னரே புதிய எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு நிர்வகிக்கப்படும். இது ஒரு நீண்ட செயற்பாட்டு முறை என்பதுடன் அரசினால் மிகவும் கவனமாகவும், நிதானமாகவும் செயற்படுத்தப்படும் சட்டரீதியான நடைமுறையாக காணப்படுகின்றது. இவ்வாறான நடைமுறைகளே கடந்த காலங்களிலும் மட்டக்களப்பு மாவட்டத்திலும் இடம்பெற்று வந்திருக்கின்றது. தவிர மாவட்டத்தில் புன்னைக்குடா போன்ற பிரதேசங்களில் இருந்த அரசகாணிகளை ஆட்சி உறுதி எனும் சட்டரீதியற்ற ஆவணத்தை புனைந்து கையகப்படுத்துவது போல எவரும் களவாட முடியாது.

இதேவேளை இலங்கையில் உள்ள அரச உத்தியோகத்தர்கள் அனைவரும் இலங்கையில் உள்ள சட்டதிட்டங்கள், கட்டளைச்சட்டங்கள், விதிகள், நிதிப்பிரமாணம்;(ஊஜி), நிர்வாகக் கோவை அஜீ, காலத்துக்கு காலம் வெளியிடப்படும் சுற்று நிருபங்கள் என்பவற்றை பின்பற்றி தமது கடமைகளை செய்ய படுத்த கடமைப்பட்டவர்கள் ஆவர். அரச உத்தியோகத்தர்களுக்கென ஒழுக்க நெறி கோவைகளும் உள்ளன. மேலும் இவர்களது செயற்பாடுகளை கண்காணிக்க இலங்கை பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் நிர்வாக கட்டமைப்பு முறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவை எல்லாவற்றுக்கும் மேலாக இலங்கை அரசியலமைப்பின்படி குறைகேள் அதிகாரி (ஃடீட்ஞதஞ்ஙீண்ட்ச்ண) ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இலங்கையில் இவ்வாறான ஒரு சிறந்த அரசநிர்வாக கட்டமைப்பு காணப்படுகின்ற போது அரச உத்தியோகத்தர்கள் காணிகளை களவாடினார்கள், கபளிகரம் செய்தார்கள், அவர்கள் நிர்வாக பயங்கரவாதிகள் என பொறுப்புவாய்ந்த ஒரு பாராளுமன்ற உறுப்பினர் பொதுவெளியில் கூறுவது எவ்வகையில் ஏற்புடையதாகும்?

களவு என்பது இலங்கை தண்டனைச் சட்டக்கோவையின்படி ஒருவரின் உரிமையிலுள்ள பொருளை இன்னொருவர் கபடமாக அபகரிப்பதாக வியாக்கியானம் செய்யப்படுகிறது. அவ்வாறெனின் யாரின் உடமைகளிலிருந்த காணிகளை அரச அதிகாரிகள் களவாடினார்கள்? எனும் கேள்வி எழுகிறது. இவ்வாறான கருத்துகளை தெரிவித்ததன் மூலம் பாராளுமன்ற உறுப்பினர் இலங்கை அரச சேவையினையும் அரச உத்தியோகத்தர்களையும் அபகீர்த்திக்கு உட்படுத்தியுள்ளார் என்றே கருதவேண்டியுள்ளது.

இக்கருத்துக்களை தெரிவித்துள்ளவர் சாதாரண பொதுமகன் அல்ல. முன்னைநாள் கிழக்கு மாகாண முதலமைச்சர், தற்போதைய மாவட்ட அபிவிருத்திகுழுவின் இணைத்தலைவர்களில் ஒருவர், பிரதான கட்சியொன்றின் சிரேஷ்ட உபதலைவர் என்பது வருத்தத்திற்குரியதாகும்.

அதிகார பயங்கரவாதம் என்ற எந்த அகராதியிலும் இல்லாத ஒரு பதத்தை கண்டெடுத்து பயன்படுத்தியது மக்கள் மத்தியில் சந்தேகத்தையும் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது. கடந்த காலங்களில் மதத்தீவிரவாதத்தால் சிதைந்திருக்கின்ற நாட்டின் நல்லிணக்கத்தை அரச உத்தியோகத்தர்கள் மத்தியில் மேலும் குரோதங்களை ஏற்படுத்துவதன் மூலம் இன்னுமோர் வகையான தீவிரவாதத்திற்கு தூபமிடப்படுகிறதா? என மக்கள் ஐயமுறுகின்றனர்.

மாவட்ட அரச அதிகாரிகள் இவ்வாறானவர்களுடன் இணைந்து எவ்வாறு பக்கச்சார்பற்ற அபிவிருத்தியினை மாவட்டத்தில் ஏற்படுத்த முடியுமென அங்கலாய்க்கின்றனர். பாராளுமன்ற உறுப்பினரின் கருத்துக்கு அதிகாரத்துள்ள அரச அதிகாரிகளின் நிலைப்பாடுதான் என்ன? இன்னும் வாய்மூடி மௌனிகளாக தாங்கள் காணிக் கள்ளர்கள்தான் என ஏற்கபோகின்றனரா? இவ்விடயத்தில் மட்டக்களப்பு மாவட்ட தமிழ் மக்கள் தெரிவு செய்த தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் நிலைப்பாடு என்ன? கிழக்கின் மீட்பாளர்கள் வழமை போல வாய்பொத்தி கைகட்டி வாளாதிருக்கப் போகின்றனரா? என்பதே மாவட்ட மக்களது இன்றைய கேள்விகளாகும். என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.






# நினைவு மலருக்கு படைப்புக்களை கோரல்

(அ. அச்சுதன்)

குறிஞ்சாக்கேணி படகுப்பாதை விபத்தை ஆவணப்படுத்தும் நோக்கில் கிண்ணியா பேனா இலக்கியப் பேரவை ஒரு நினைவு மலரை வெளியீடு செய்வதற்கான முயற்சியில் உள்ளது. எனவே கிண்ணியா படைப்பாளிகளிடமிருந்து காத்திரமான கவிதை கட்டுரைகள் மட்டுமே கோரப்படுகின்றன.

குறிப்பு சிறந்த படைப்புக்கள் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்படும்.

படைப்புக்களை எதிர்வரும் 2022.01.25ம் திகதிக்கு முன்னர் கீழ்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வேண்டுகின்றோம்.

Firosmi.penagmail.com

*மேலதிக தொடர்புகளுக்கு*
ஜே.பிரோஸ்கான்
பணிப்பாளர்
பேனா இலக்கியப் பேரவை
0779300397, 0752203397

## காணாமல் போன சிறுவர்கள் பொதுமக்களின்

தகவல்களையும் கண்டறிய முடியவில்லை.

அதன்படி, இந்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணை நடவடிக்கைகள் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் கொலை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்ற விசாரணை பிரிவினால் மேற்கொள்ளப்படும் என பொலிஸார் அறிவித்துள்ளனர்.

அதன்படி, இந்த சிறுவர்கள் தொடர்பில் தகவல் அறிந்தால் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொலைப்பேசி இலக்கங்களுக்கு அறிவிக்குமாறு பொலிஸார் பொதுமக்களுக்கு அறிவித்துள்ளனர்.

## மீண்டும் வடக்குக்கு இடமாறும் நீதிபதி

மட்டக்களப்பு குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதி டெனிஸ் சாந்தன் சூசைதாஸன், திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதியாக இடமாற்றப்பட்டுள்ளார்.

வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி இராமநாதன் கண்ணன், யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதியாக இடமாற்றப்பட்டுள்ளார்.

திருகோணமலை குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதி விநாயகமூர்த்தி இராமக்கமலன், மட்டக்களப்பு குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதியாக இடமாற்றப்பட்டுள்ளார்.

## தமிழ்- முஸ்லிம் ஒற்றுமைக்கு ஸ்ரீலங்கா

கட்சிகளின் கோரிக்கைக்கு, முஸ்லிம் அரசியல் கட்சிகள் ஆதரவளிக்கக் கூடாது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொழும்பு மாவட்ட அமைப்பாளர் பைசர் முஸ்தபா தனது இல்லத்தில் ஊடக சந்திப்பு ஒன்றை நடத்தியதோடு, தமிழ் பேசும் கட்சிகளின் சந்திப்பு குறித்தும் கருத்து வெளியிட்டுள்ளார்.

தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகள் இணைந்து தீர்மானங்களை மேற்கொள்வது மற்றும் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களை விட சுமந்திரன், சாணக்கியன் போன்ற தமிழ் உறுப்பினர்களும் முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் குறித்து பேசுவதை தான் பாராட்டுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறெனினும், வடக்கு, கிழக்கை இணைப்பதற்கான ஆதரவை தமிழ் கட்சிகள் கோரினாலும் அதற்கு இடமளிக்க முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் பேசும் கட்சிகளின் சந்திப்பின் பின்னர் உருவாக்கப்பட்ட ஆவணத்தில் வடக்கு, கிழக்கு இணைப்பு தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ளதால் முஸ்லிம் கட்சிகள் கையெழுத்திட மறுத்துவிட்டதாக தனக்கு தகவல் கிடைத்ததாக ஸ்ரீலங்காவின் முன்னாள் அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தை விட ஏனைய மாகாணங்களில் சிங்களவர்களுடன் முஸ்லிம்கள் இணைந்து வாழ்வதாகவும், வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் அதிகம் என்பதோடு, மலையக மக்களின் அரசியல் போக்கு என்பது வேறு எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முஸ்லிம் அரசியல் கட்சிகள் எத்தகைய தீர்மானங்களை எடுத்தாலும், ஏனைய மாகாணங்களில் வாழும் முஸ்லிம்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் அவை மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் அவர் கூறியுள்ளார்.

எந்தவொரு அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் அமைச்சுப் பதவிகளை பெற்று முஸ்லிம் மக்களின் தேவைகளை கருத்திற்கொண்டு அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ள வேண்டுமெனவும், எனினும் அப்படி எதுவும் நடக்கவில்லை எனவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

முஸ்லிம் உறுப்பினர்கள், அவர்களின் நன்மையை மாத்திரமே கருத்திற்கொண்டு செயற்படுவதாகவும், இதற்கமைய 20ஆவது திருத்தச் சட்டத்திற்கு முஸ்லிம் கட்சித் தலைவர்கள் எதிர்ப்பு தெரிவித்த போதிலும், அம்மன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்திற்கு ஆதரவாக வாக்களித்ததாகவும் முன்னாள் அமைச்சர் பைசர் முஸ்தபா மேலும் தெரிவித்துள்ளார்.

## இராணுவ ஆட்சியை கொண்டு வரவே

நாட்டில் இராணுவ ஆட்சியை கொண்டு வருவதற்காக, சிறையில் இருந்த தேரரை கொண்டு வந்து தனது ஆயுதமாக கோட்டா பயன்படுத்தி வருகின்றார்.

இராணுவ தளபதிகளை அமைச்சின் செயலாளர்களாக அவர் நியமித்துள்ளார். கிட்டத்தட்ட 14 அமைச்சின் செயலாளர்கள் இராணுவ தளபதிகள். அத்துடன் ஆளுநர், திணைக்கள தலைவர்களும் அவ்வாறே நியமிக்கப்பட்டுள்ளனர்.

புத்த பெருமானின் அவதாரமாக தன்னை காட்டிக்கொள்ளும் தேரர், இப்போது ஒரே நாடு ஒரே சட்டம் என்ற புதிய அவதாரத்தை எடுத்துள்ளார்.

நாம் இப்போதும் இராணுவ ஆட்சியில் தான் உள்ளோம். இது தமிழ் மக்களுக்கு மட்டும் இடி அல்ல. சிங்கள மக்களுக்கும் இது ஆபத்தானது. ஏனென்றால் 1970களில் கதிர்காமத்து அழகி மன்னம்பேரியை நிர்வாணமாக்கி கொன்றவர்கள் இராணுவத்தினர்.

பிரேமதாச காலத்திலும் சுமார் 50 ஆயிரம் சிங்கள இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதற்காக அப்போது பிரேமதாசவுக்கு எதிராக மஹிந்த ராஜபக்ச சர்வதேசம் வரை சென்றிருந்தார்.

தமிழர்கள் முதலும் இராணுவ ஆட்சியில் இருந்தார்கள். அதேபோல பொருளாதார ரீதியான பிரச்சனைகளை தமிழர்கள் எதிர்கொண்டு வாழ்ந்தவர்கள். எனவே தமிழர்களுக்கு இது புதிதல்ல. சிங்கள மக்கள் தற்போது துன்பத்தை உணர ஆரம்பித்துள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## அமைச்சுப்பதவிகளை துறக்க வேண்டிய நிலை

அமைச்சரவை கூட்டுப்பொறுப்பை மீறும் செயற்பாடென அமைச்சர்களான உதய கம்மன்பில, விமல் வீரவன்ச மற்றும் வாசுதேவ நாணயக்கார ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

அமைச்சுப்பதவிகளை துறக்க வேண்டிய நிலை ஏற்பட்டால் தயக்கமின்றி தீர்மானம் எடுப்போம் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அமைச்சரவை கூட்டுப்பொறுப்பை மீறும் விதத்தில் அமைச்சர்கள் சிலர் செயற்படுவதாகவும் அவர்கள் அமைச்சுப்பதவிகளை துறந்து அரசாங்கத்தை விட்டு வெளியில் சென்று தமது விமர்சனங்களை முன்வைக்க முடியும் எனவும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தேசிய பத்திரிகை ஆசிரியர்களுடனான சந்திப்பில் தெரிவித்திருந்த நிலையில், குறித்த விமர்சனத்தை எதிர்கொள்ளும் அமைச்சர்களான விமல் வீரவன்ச, உதய கம்மன்பில மற்றும் வாசுதேவ நாணயக்கார ஆகியோர் தங்களுடைய நிலைப்பாட்டை ஊடகமொன்றுக்கு வெளிப்படுத்திய போதே இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

## மகிந்தவின் ஆட்சியை கலைக்க முடியாது

வெளியிட்டு வரும் கருத்துக்களுக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கை பொதுஜன முன்னணி என்ற இந்தக் கட்சியை ஆரம்பிக்கும்போது நாம் பல சவால்களை எதிர்கொண்டோம். எனினும், அந்தச் சவால்களை முறியடித்து தனிப் பெரும் கட்சியாக பொதுஜன முன்னணியை வளர்த்தெடுத்துள்ளோம்.

இதற்கு மக்களின் அமோக ஆதரவே முக்கிய காரணம்.

இப்போது எவராலும் அசைக்க முடியாத மாபெரும் கட்சியாக கூட்டணியாகப் பொதுஜன முன்னணி திகழ்கின்றது.

எதிரணியினர் நினைப்பது போல் பொதுஜன முன்னணிக்குள் முரண்பாடுகள் எதுவும் இல்லை. இங்கு கருத்துச் சுதந்திரத்துக்கு இடமுண்டு. எவரும் கருத்துக்களைப் பகிரங்கமாகத் தெரிவிக்க முழுச் சுதந்திரம் உண்டு.

ஒரு சிலரின் உணர்ச்சி மிகுந்த கருத்துக்களை வைத்துக்கொண்டு எதிரணியினர் அரசியல் நடத்துகின்றனர். எதிரணியினரின் இந்தச் சிறுபிள்ளைத்தனமான அரசியல் பரப்புரைக்கு மக்கள் எவரும் செவிசாய்க்கக்கூடாது.

2022ஆம் ஆண்டில் எமது அரசின் வேலைத்திட்டங்களை நாடெங்கும் விஸ்தரிக்கவுள்ளோம். பொருளாதாரப் பாதிப்பிலிருந்து நாம் மீண்டெழுவோம். இந்த நம்பிக்கை இன்னமும் வீண்போகவில்லை என பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

## சம்பந்தன், மனோ, ஹக்கீம் இன்று சந்திப்பு

செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் கூட்டமைப்பின் சார்பிலும், ரவூப் ஹக்கீம் உள்ளிட்டவர்கள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பிலும் பங்கேற்கவுள்ளனர்.

இச்சந்திப்பில் மனோ கணேசனும் பங்கேற்பாரென எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை, இந்திய ஒப்பந்தம் முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும், இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும். இதற்கான அழுத்தத்தை இலங்கை அரசுக்கு இந்தியா பிரயோகிக்க வேண்டும் எனக்கோரி இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு கூட்டு ஆவணமொன்றை அனுப்பிவைப்பதற்கு தமிழ் பேசும் கட்சிகள் முயற்சித்து, இதுவரை மூன்று சுற்று பேச்சுகள் இடம்பெற்றுள்ளன.

எனினும், சில அரசியல் காரணங்களால் கூட்டு ஆவணத்தில் கையொப்பமிட முஸ்லிம் கட்சிகள் இழுத்தடிப்பு செய்துவருகின்றன.

அக்கட்சிகளின் தலைவர்களுக்கு கடும் அரசியல் நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையிலேயே நாளை ஹக்கீமை, சம்பந்தன் தரப்பு சந்திக்கவுள்ளது.

# இறை நம்பிக்கையும் தன்நம்பிக்கையுமே தர்ஷிகாவை சாதனையாளராக மாற்றியது

## அம்பாறை மாவட்ட பதில் அரசாங்க அதிபர் வி.ஜெகதீசன்

(வி.சுகிர்தகுமார் )

இறை நம்பிக்கையும் தன்நம்பிக்கையுமே தர்ஷிகாவை சாதனையாளராக மாற்றியது என அம்பாறை மாவட்ட பதில் அரசாங்க அதிபர் வி.ஜெகதீசன் தெரிவித்தார்.





அக்கரைப்பற்று விபுலானந்தா அபிவிருத்தி நிலையம் மற்றும் இந்து இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் நேற்று இடம்பெற்ற வருட ஒன்று கூடல் நிகழ்வில் அம்பாறை மாவட்ட பதில் அரசாங்க அதிபர் வி.ஜெகதீசன் கலந்து கொண்டு சாதனை மாணவி வைத்தியர் தர்ஷிக்காவினை பாராட்டியதுடன் பொன்னாடை போர்த்தி கௌரவித்து நினைவுச்சின்னத்தினையும் வழங்கி வைத்து உரையாற்றுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

அக்கரைப்பற்று விபுலானந்தா அபிவிருத்தி நிலையம் மற்றும் இந்து இளைஞர் மன்றத்தின் ஸ்தாபகர் இறைபணிச்செம்மல் த.கயிலாயபிள்ளை தலைமையில் மன்ற கட்டடத்தில் இடம்பெற்ற நிகழ்வில் திருக்கோவில் பிரதேச செயலாளர் ரி.கஜேந்திரன் உதவிப்பிரதேச செயலாளர் க.சதிசேகரன் அம்பாரை மாவட்ட நீர்ப்பாசன பணிப்பாளர் சுகத்கமகே பொறியியலாளர் ஏ.லியனகே உள்ளிட்ட அரச அதிகாரிகள் மன்றத்தின் இயக்குனர் சபை உறுப்பினர்கள் மாணவர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

விபுலானந்தா அபிவிருத்தி நிலைய பாலர் பாடசாலையில் தனது கல்வி வாழ்க்கையினை ஆரம்பித்து கல்வியில் பல சாதனை படைத்து கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பொதுப் பட்டமளிப்பு விழா நிகழ்வின் போது 13 தங்கப் பதக்கங்களை பெற்று சாதனை படைத்த அக்கரைப்பற்றினைச் சேர்ந்த மருத்துவர் தணிகாசலம் தர்ஷிகாவின் பாராட்டு நிகழ்விலும் ஒன்று கூடல் நிகழ்விலும் கலந்து கொண்டவர்கள் தர்ஷிகாவினை பாராட்டி பேசினர்;. பதில் அரசாங்க அதிபர் உரையாற்றுகையில் இறை நம்பிக்கையும் தன்நம்பிக்கையும் ஒரு மனிதரை ஒழுக்கமுள்ள சாதனையாளர்களாக மாற்றும் என்றார். இதற்கு சிறந்த உதாரணமாக வைத்தியர் தர்ஷிகாவை சொல்ல முடியும் எனவும் தெரிவித்தார்.

தர்ஷிகாவினை மாணவர்கள் ரோல் மொடலாக பின்பற்ற முடியும் எனவும் குறிப்பிட்டார். இதேநேரம் கலந்து கொண்ட அதிதிகளும் மன்றத்தினரும் வாழ்த்தினை தெரிவித்துக்கொண்டதுடன் பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர்.

அக்கரைப்பற்று விபுலானந்தா அபிவிருத்தி நிலையம் மற்றும் இந்து இளைஞர் மன்றத்தின் உபதலைவரான தர்ஷிகாவின் தந்தை தாய் உள்ளிட்ட குடும்பத்திற்கும் வாழ்த்தினை தெரிவித்த மன்றத்தின் தலைவர் மற்றும் பதில் அரசாங்க அதிபர் உள்ளிட்டவர்கள் இணைந்து தர்ஷிக்காவுக்கான நினைவுச்சின்னத்தினை வழங்கி வைத்தனர்.

இதேநேரம் நிகழ்வில் கலந்து கொண்ட பதில் அரசாங்க அதிபர் உள்ளிட்டவர்களை விபுலானந்தா அபிவிருத்தி நிலைய இயக்குனர் சபையினர் பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர்.

சாதனை மாணவி தர்ஷிக்கா கௌரவித்தினை வழங்கிய அக்கரைப்பற்று விபுலானந்தா அபிவிருத்தி நிலையம் மற்றும் இந்து இளைஞர் மன்றத்தினருக்கு நன்றி கூறியதுடன் தனது கல்வி வாழ்க்கையினை ஆரம்பித்து வைத்த பாலர் பாடசாலையின் நிருவாகம் மற்றும் ஆசிரியர்கள் முன்னிலையில் கௌரவம் பெறுவதை தனது பாக்கியமாக கருதுவதாக கூறியதுடன் சாதனை அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டார். தமது குடும்பம், ஆசிரியர்கள், நல்ல நண்பர்கள், விடா முயற்சி என்பன தனது சாதனைக்கு வித்திட்டதனையும் நினைவுகூர்ந்தார்.

# ஆரையம்பதி மாவட்ட வைத்தியசாலை ஐந்து விருதுகளைப்பெற்று சாதனை



மட்டக்களப்பு மாவட்ட சுகாதார பணிப்பாளர் பணிமனையானது மாவட்ட வைத்தியசாலைகளுக்கிடையே நடாத்திய போட்டியில் ஐந்து விருதுகளைப்பெற்று ஆரையம்பதி மாவட்ட வைத்தியசாலை சாதனை படைத்துள்ளது.

ஆரையம்பதி மாவட்ட வைத்தியசாலையின் பொறுப்புவைத்திய அதிகாரி திருநாவுக்கரசு கௌரிசங்கரன் இவ் விருதுகளைப் பெற்றுக்கொண்டுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சுகாதார நிறுவனங்களுக்கிடையே நடத்தப்பட்ட சிறந்த செயற்றிறனுக்கான போட்டியில் மாவட்டத்திலேயே முதல் இடம்பெற்றுச் சாதனை படைத்த

ஆரையம்பதி மாவட்ட வைத்தியசாலை சிறந்த ஆரோக்கிய வாழ்வு நிலையப் போட்டியிலும் முதலிடம் பெற்றுள்ளது.

ஆரம்ப சுகாதார பராமரிப்பு திட்டம் 2019/2020 ஆம் ஆண்டுக் கான போட்டியில் இரண்டாமிடத்தையும் ஆய்வுகூட சேவைகள் போட்டியிலும் சிறந்த மருந்துக்களஞ்சியசாலை மற்றும் மருந்து வழங்கல் சேவையிலும் சிறப்பு பாராட்டு விருதுகளையும் சுவீகரித்துக் கொண்டது.

அதற்கான விருதுகள் இவ்வாண்டுக்கான செயற்றிறன் விருது வழங்கும் விழாவின் போது வழங்கி வைக்கப் பட்டுள்ளது. மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு இவ்விருதுகளை வழங்கி வைத்துள்ளதுடன், பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளார்.

# கல்முனை கடற்கரைப் பள்ளி கொடியேற்று விழாவுக்கு மாநகர சபையில் செயலாற்றுக் குழு நியமனம்

(அஸ்லம் எஸ்.மௌலானா)

அரச அங்கீகாரத்துடன் தேசிய கலாசார விழாவாக கொண்டாடப்படவுள்ள கல்முனை கடற்கரைப் பள்ளிவாசல் நாகூர் ஆண்டகை தர்ஹாவின் 200ஆவது வருடாந்த கொடியேற்று விழாவுக்காக கல்முனை மாநகர சபையினால் முன்னெடுக்கப்பட வேண்டிய விடயங்களை கையாள்வதற்காக விசேட செயலாற்றுக் குழுவொன்று மாநகர முதலவரினால் நியமிக்கப்பட்டுள்ளது.



கல்முனை நாகூர் ஆண்டகை தர்ஹாவின் 200 ஆவது கொடியேற்று விழா ஏற்பாடுகள் தொடர்பாக கல்முனை மாநகர சபையில், நேற்று முன்தினம் (29) மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம். றகீப் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இக்குழுவினரை நியமனம் செய்தார்.

மாநகர சபையின் அதிகாரிகள் தரப்பில் ஆணையாளர் எம்.சி.அன்சார் தலைமையில் கணக்காளர் ஏ.எச்.தஸ்தீக், பிரதம சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் அர்ஷாத் காரியப்பர், வேலைகள் அத்தியட்சகர் வி.உதயகுமரன், தொழில்நுட்ப உத்தியோகத்தர் எம்.அமீர், சுகாதாரப் பிரிவு முகாமைத்துவ உத்தியோகத்தர் யூ.எம்.இஸ்ஹாக் ஆகியோர் நியமிக்கப் பட்டுள்ளனர்.

அத்துடன் சபை சார்பில் பிரதி முதல்வர் ரஹ்மத் மன்சூர் தலைமையில் மாநகர சபை உறுப்பினர்காளான் எம்.எஸ்.எம்.நிசார், ரொஷான் அக்தர், ஏ.சி.ஏ.சத்தார், எம்.எம்.பைரூஸ், ஏ.ஆர்.அமீர், எம்.எஸ்.உமர் அலி, எம்.எஸ்.எம்.ஹாரிஸ் ஆகியோருடன் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸின் பிரத்தியேக செயலாளர் நௌபர் ஏ.பாவா மற்றும் 12ஆம் வட்டார அமைப்பாளர் எம்.எஸ்.எம்.பளீல் ஆகியோரும் இக்குழுவுக்கு அங்கத்தவர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இக்கொடியேற்று விழாவுக்காக மாநகர சபையினால் முன்னெடுக்கப்பட வேண்டிய அனைத்து விடயங்களையும் கையாள்வதற்காக தெரிவு செய்யப்பட்ட இச்செயலாற்றுக் குழுவினருக்கு மாநகர சபைகள் கட்டளைச் சட்டம் பிரிவு 14 (4) யின் கீழ் அனைத்து அதிகாரங்களும் தன்னால் வழங்கப்பட்டிருப்பதாக மாநகர முதல்வர் ஏ.எம்.றகீப் இதன்போது அறிவிப்புச் செய்தார்.

இச்செயலாற்றுக் குழுவின் ஒருங்கிணைப்பில் குறித்தொதுக்கப்பட்ட அனைத்துப் பணிகளையும் சம்மந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் முறையாகவும் துரிதமாகவும் நிறைவேற்ற வேண்டும் எனவும் அவர் பணிப்புரை விடுத்துள்ளார்.

அரச வர்த்தமானி பத்திரிகை மூலம் தேசிய கலாசார விழாவாக அங்கீகரிக்கப் பட்டுள்ள கல்முனை நாகூர் ஆண்டகை தர்ஹாவின் 200 ஆவது வருடாந்த கொடியேற்று விழா எதிர்வரும் 04ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு, தொடர்ச்சியாக 12 நாட்கள் கொண்டாடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# திருக்கோவில் போலிஸ் நிலையத்தில் சுட்டுக்கோல்லப்பட்ட போலிஸாருக்கு கல்முனை மாநகர சபையில் அனுதாபப் பிரேரணை நிறைவேற்றம்



(அஸ்லம் எஸ்.மௌலானா)

திருக்கோவில் பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் உயிரிழந்த பொலிஸாருக்கு கல்முனை மாநகர சபையில் அனுதாபப் பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளது.

கல்முனை மாநகர சபையின் 45ஆவது மாதாந்த பொதுச் சபை அமர்வு நேற்று முன்தினம் புதன்கிழமை (29) பிற்பகல், மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில் இடம்பெற்றபோதே இப்பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

மாநகர சபையின் தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் சந்திரசேகரம் இராஜன் இப்பிரேரணையை சமர்ப்பித்து உரையாற்றினார். மேற்படி சம்பவத்தில் உயிரிழந்த 04 பொலிஸாரில் ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் எமது பாண்டிருப்பு பிரதேசத்தை சேர்ந்த நவீனன் எனும் இளைஞன் மிகவும் துடிப்புள்ள, சமூக சேவைகளிலும் ஈடுபட்டு வந்த ஒருவர் எனவும் இவரது இழப்பு என்பது எவராலும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவ்வாறே ஒலுவில் பிரதேசத்தை சேர்ந்த அப்துல் காதர் எனும் பொலிஸ் உத்தியோகத்தரும் சமூகத்தின் நன்மதிப்பை பெற்றிருந்த ஒருவர் எனவும் மேலும் இரண்டு சிங்கள பொலிஸார் உட்பட இந்நால்வரின் குடும்பத்தினரும் இவர்களின் இழப்பினால் துன்புற்று அவஸ்தைப்பட்டதை நேரடியாகக் கண்டு மிகவும் கவலையடைந்துள்ளேன் எனவும் உறுப்பினர் இராஜன் இதன் போது குறிப்பிட்டார்.

இந்த அனுதாபப் பிரேரணையை மாநகர சபையின் தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களான ஹென்றி மகேந்திரன், அழகக்கோன் விஜயரட்ணம் ஆகியோர் வழிமொழிந்து ஆதரித்தனர்.

இதையடுத்து இப்பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்படுவதாக அறிவித்த மாநகர முதலவர் ஏ.எம். றகீப், இந்த அனுதாபத் தீர்மானத்தை குறித்த சம்பவத்தில் உயிர்நீத்த நான்கு பொலிஸாரினதும் குடும்பத்தினருக்கு அனுப்பி வைக்குமாறு சபைச்செயலாளரை அறிவுறுத்தினார்.

# மன்னார் மாவட்ட செயலகத்தில் நத்தார் பண்டிகை ஒளி விழா

( வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மாவட்ட செயலகத்தினால் 2021ம் ஆண்டுக்கான ஒளி விழா மாவட்ட செயலக ஜெய்க்கா மாநாட்டு மண்டபத்தில் புதன்கிழமை (29.12.2021) சிறப்புற இடம்பெற்றது.

இந்நிகழ்வினை மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.ஸ்டான்லி டீமெல் அவர்களின் தலைமையில் மாவட்ட அருட்தந்தையர்கள்இ மேலதிக அரசாங்க அதிபர்இ திட்டமிடல் பணிப்பாளர், பிரதி திட்டமிடல் பணிப்பாளர், ஏனைய பதவிநிலை உத்தியோகத்தர்கள் ஆகியோருடன் இந் நத்தார் ஒளி விழாவினை மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் சிறப்பித்திருந்தனர்.

குறித்த ஒளி விழா நிகழ்வில் கரோல் கீதம் இசைக்கப்பட்டு கலை நிகழ்வுகளும் பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெற்றன.

இதேவேளை, தற்போதுள்ள கொரோனாத் தொற்று அச்சநிலையினைக் கருத்திற் கொண்டு வழமைபோன்று அல்லாது சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்பட்டு மட்டுப்படுத்தப்பட்டவளவில் மேற்படி விழா இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

# விளையாட்டுத்துறை சாதனையாளர்கள் கௌரவிப்பு




(காரைதீவுநிருபர் வி.ரி.சகாதேவராஜா)

கிழக்கின் பழம்பெரும் கழகமாம் காரைதீவு விளையாட்டுக்கழகத்தின் உறுப்பினர்களாகவிருந்து இவ்வாண்டு விளையாட்டுத்துறையில் சாதனை படைத்த அறுவர் வருடாந்த பொதுக்கூட்டத்தில் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

வருடாந்த பொதுக்கூட்டம்கழக தலைமையகத்தில் கழகத்தலைவர் கி.சசிகரபவான் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற போதே இக்கௌரவிப்பு இடம் பெற்றது.

அதிதிகளான கழகப்போசகர்களான காரைதீவு பிரதேசசெயலாளர் சிவ.ஜெகராஜன், உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் வே.இராஜேந்திரன், உதவிக்கல்விப்ணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா மற்றும் முன்னாள் தலைவர்களான சி.நந்தகுமார், வெ.அருட்குமரன், ஏ.லோகிதராஜா ஆகியோர் கலந்துகொண்டு மேற்படி அறுவரையும் பாராட்டி பரிசுகள் வழங்கினர்.

கழகச்செயலாளர் வெ.உதயகுமரன் ஆண்டறிக்கையை சமர்ப்பிக்க நிதிச்செயலாளர் என்.சுபதீபன் கடந்தகால நிதிஅறிக்கையை சமர்ப்பித்தார்.இதன்போது 2022ஆம் ஆண்டுக்கான புதியநிருவாக சபையும் தெரிவு செய்யப்பட்டது. ,புதிய தலைவராக வெ.அருட்குமரன் ,செயலாளராக எஸ்.கிருஷாந்த், பொருளாளராக எ.பிரேமானந்த் உள்ளிட்ட புதிய நிருவாகம் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டது.


வெகுவிரைவில்
கோலாகலமாக
திறக்கப்பட உள்ள
Kings
TRS
Niru
Aachi
LEELA
Maggi
Suryaa
LION
PG tips
Maliban
Rubicon
Double Horse
ELAKKIA
Tilda
OKF
Asiatischer Lebensmittelladen
IMPORTAS
200+பார்க்கிங் வசதியுடன்
HIGHWAY யிலிருந்து 700M தூரம் மட்டுமே!
சுவைமிகுந்த தாயக உணவுகளை பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்
Parkweg 2
4665 Oftringen
Tel : 062 798 11 11
www.importasoftringen.ch


Offer From
18.12.2021 to 15.01.2022
(Unsere Öffnungszeiten während der Feiertage finden Sie auf der Rückseite)
மாபெரும்
அதிரடி மலிவு விற்பனை
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் நத்தார், புது வருட
தை திருநாள் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம்
importas Cash & Carry
Bern & Zürich
Merry Christmas & HAPPY NEW YEAR
Free* ab 300 CHF
CHF 300 க்கு மேல் காள்வனவு செய்பவர்களுக்கு
CHF 39.90 பெறுமதியான
Rice Cooker இலவசம்.
18.12.2021 தொடக்கம் 31.12.2021 வரையே
CHF 119.-
CHF 60.-
அதிரடி விலையில்
V Box கொள்வனவு
செய்பவர்களுக்கு
50% விலைக்கழிவு.
Nur solange Vorrat reicht.
Einkaufswert ab 300 Fr. Subash Rice Cooker free.

## புளியடிச்சோலை 13 வயதான மாணவி கடத்தப்பட்ட விவகாரம்

# நடவடிக்கை எடுக்கக் கோரி மனோ எம்.பி. மூதூர் போலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடம் கோரிக்கை

(அ . அச்சுதன் )



புளியடிச்சோலை கிராமத்தைச் சேர்ந்த 13 வயதான மாணவி கடத்தப்பட்ட விவகாரம் தொடர்பாக மூதூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியை தொடர்பு கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் மனோகணேசன் சம்பந்தப்பட்ட சிறுமியை உடனடியாக கண்டுபிடிக்கவும் கடத்திய நபருக்கு கடுமையான தண்டனை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது;

புளியடிச்சோலை கிராமத்தைச் சேர்ந்த 13 வயதான சிறுமி கடத்தப்பட்டு 20 நாட்களுக்கு மேலாகியும் குறித்த சிறுமி கட்டுபிடிக்கப்படவில்லை எனவும் இன்று பாராளுமன்ற உறுப்பினர் மனோகணேசன் அவர்களிடம் கடத்தப்பட்டுள்ள சிறுமியின் சார்பாக தெரிவிக்கப்பட்டதையடுத்து பாராளுமன்ற உறுப்பினர் உடனடியாக மூதூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியை தெலைபேசியில் தொடர்பு கொண்டு இவ்விடையம் தொடர்பாக வினவினார். இதன்போது குறித்த சிறுமியை கடத்தியதாக சந்தேகிக்கப்படும் நபரின் உறவினர் ஒருவரை கைது செய்து விசாரித்து வருவதாகவும் விரைவில் சம்பந்தப்பட்ட நபரை கைது செய்து சிறுமியை மீட்டுத்தருவதாக மூதூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்ததாகவும் மனோகணேசன் தெரிவித்தார்.

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட புளியடிச்சோலை கிராமத்தைச் சேர்ந்த 13 வயதான பாடசாலை மாணவி ஒருவர் 07.12.2021 அன்று இரவு அக்கிராமத்தைச் சேர்ந்த செல்வநாயகம் உதயன் (வயது 24) என்பவரினால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார் இது தொடர்பாக மூதூர் பொலிஸ் நிலையத்தில் 08.12.2021 அன்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. எனினும் 20 நாட்களுக்கு மேலாகியும் குறித்த சிறுமியை பொலிசார் இன்னமும் கண்டுபிடித்து தரவில்லை என பெற்றோர் கவலை வெளியிட்டு வருகின்றனர்.

சம்பவத்தில் கடத்தப்பட்ட சிறுமி கங்குவேலி அகத்தியர் வித்தியாலயத்தில் தரம் 8ல் கல்வி கற்றுவந்தார். இச்சிறுமியை கடத்தியதாக கூறப்படும் செல்வநாயகம் உதயன் என்பவர் கடந்த வருடம் 13 வயதான இன்னுமொரு சிறுமியை கடத்திச் சென்று துஸ்பிரயோகத்திற்கு உட்படுத்தியிருந்த நிலையில் கைது செய்யப்பட்டு இவ்வருடம் பெப்ரவரி மாதம் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தார். இவ்வாறான நிலையில் இன்னுமொரு சிறுமியை கடத்திச் சென்றிருப்பது கிராம மக்களிடத்தில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றது.

# தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 14 வது பொதுப் பட்டமளிப்பு விழா 2022

(பாறுக் ஷிஹான்)




இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பதினான்காவது பொதுப் பட்டமளிப்பு விழா எதிர்வரும் பெப்ரவரி மாதம் 07 ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை நடத்தப்படுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இப்பட்டமளிப்பு விழா நிகழ்வுகள் பல்கலைக்கழக மாநாட்டு மண்டபத்தில் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தலைமையில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இம்முறை பட்டமளிப்பு விழா நிகழ்வுகள் நான்கு நாட்களுக்கு ஐந்து அமர்வுகளாக நடத்துவதற்கு ஏற்பாடாகியுள்ளன.

முதல் அமர்வில் பிரயோக விஞ்ஞானங்கள், பொறியியல் ஆகிய பீடங்களைச் சேர்ந்த 474 மாணவர்களுக்கு பட்டங்கள் வழங்கப்படவுள்ளன. இரண்டாம் நாள் அமர்வில் கலை கலாசார பீடத்தினைச் சேர்ந்த 566 மாணவர்களும் மூன்றாம் நாள் அமர்வில் இஸ்லாமிய கற்கைகள் அரபு மொழி பீடத்தினைச் சேர்ந்த 642 மாணவர்களும் தமது பட்டங்களைப் பெறவுள்ளனர்.

நான்காவது அமர்வில் முகாமைத்துவ வர்த்தக பீடத்தினைச் சேர்ந்த 619 மாணவர்களுக்கு பட்டங்கள் வழங்கப்படவுள்ளன. ஐந்தாவது அமர்வில் கலை கலாசார, முகாமைத்துவ வர்த்தக பீடங்களில் இணைந்து கல்வி கற்ற 312 வெளிவாரி மாணவர்களுக்கான பட்டங்கள் வழங்கப்படவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அதேநேரம், வியாபார நிருவாகம், முகாமைத்துவம், தமிழ் உள்ளிட்ட துறைகளில் பட்டப்பின்படிப்புக்களை நிறைவு செய்த மாணவர்களுக்கான முதுமாணி, முதுதத்துவமாணி பட்டங்கள் வழங்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. நாட்டில் நிலவுகின்ற கொவிட்19 அசாதாரண சூழ்நிலையினைக் கருத்திற்கொண்டு, பட்டமளிப்பு விழா நிகழ்வுகளை சுகாதார வழிகாட்டலுக்கமைய நடத்துவதற்கு பல்கலைக்கழக நிருவாகம் தீர்மானித்துள்ளது.

# பாடசாலை ஒன்றின் நிரந்தரமானவர்கள் அந்த பாடசாலை சமூகத்தினரே என்பதனை அனைவரும் உணர்ந்து கோள்ள வேண்டும்

## கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகம்

(பழுகாமம் நிருபர்)





பாடசாலை ஒன்றின் நிரந்தரமானவர்கள் அந்த பாடசாலை சமூகத்தினரே என்பதனை அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும். ஆகவே பாடசாலையினை முன்னெடுத்து செல்வதற்காக உழகை;க வேண்டிய பொறுப்பு சமூகத்தை சார்த்தவர்களிடம்தான் இருக்கின்றது என கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகம் தெரிவத்தார்

கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளராக பதவி உயர்பு பெற்ற திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகம் அவர்களைபாடட்டி கௌரவிக்கும் நிகழ்வு நேற்று குறுமண்வெளி சிவசக்தி மகா வித்தியாலம்ஜ்ஜ் மற்றும் குறுமண்வெளி கனிநு;ட வித்தியாலயம் ஆகிய பாடசாலைகள் ஒன்றிணைந்து மேற் கொண்ட பாராட்டு விழா குறுமண்வெளி சிவசக்தி வித்தியாலயத்தில் அதன் அதிபர் புஸ்பராஜா தலமையில் நடைபெற்றது. இப் பாராட்டு வழாவில் கலந்து கொண்டு எற்புரையாற்றும் போதே அவர் இவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

உண்மையில் பாடசாலை ஒன்றில் அதிபர் ஆசிரியர்கள்ஜ்ஜ்மாணவர்கள் ஏனைய ஊழியர்கள் அனைவரும் தற்காலிகமானவர்கள் காரணம் கடமை நிமிர்த்தம் வேறுபாடசாலைகளுக்கு சென்றுவிடுவார்கள் பாடசாலை ஒன்றின் நிரந்தரமானவர்கள் அந்த பாடசாலை சமூகத்தினரே என்பதனை அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும். ஆகவே பாடசாலையினை முன்னெடுத்து செல்வதற்காக உழகை;க வேண்டிய பொறுப்பு சமூகத்தை சார்த்தவர்களிடம்தான் இருக்கின்றது. எனவே சமூகத்தினர் அனைவரும் தனிப்பட்ட கோபதாபங்களை கழைந்து பாடசாலையின் அபிவிருத்திக்காக பாடுபடவேண்டும்.

நான் யுத்த காலம் தொடக்கம் இப்பகுதியில் கடமையாற்றி வருகின்றேன் எனவே அன்று தொடக்கம் இன்ற வரை அனைத்து பாடசாலைகளின் வரலாறுகளை அறிந்தவர் என்ற வகையில் இந்த பாடசாலை எவ்வாறான வரலாற்றை கொண்டது என்பது எனக்கு நன்கு தெரியும். இந்த பாடசாலை மாணவன் ஒருவர் இணைந்த வடக்கு கிழக்கு மாகாண கல்விச் செயலாளராக இருந்துள்ளார் அவ்வாறான பொருமைக்குரிய பாடசாலையாக இப் பாடசாலை காணப்படுகின்றது. தற்போது இப் பாடசாலையானது பட்டிருப்பு கல்வி வலயத்தில் பலதரப்பட்ட சாதனைகளை நிகழ்த்திவருகின்றது. அதற்குதுணையாக இன்று திறமையான அதிபர் ஒருவர் தற்போது சிறப்பான நிர்வாகத்தினை மேற் கொண்டு வருகின்றார.; தற்போது அவர் ஒரு படிமேற் சென்று ஜ்ஜ்கணித விஞ்ஞான பிரிவினையும் ஆரம்பித்திருக்கின்றமை சிறப்பானதொரு விடயமாகும் மாகாணத்தில் கணிதஜ்ஜ் விஞ்ஞான துறையில் சிறந்த பெறுபேறுகளைப் இப்பாடசாலையான எதிர்காலத்தில் பெறவேண்டும் என நான் வாழ்த்துகின்றேன்.

எமது பட்டிருப்பு வலயமானது சிறந்த அதிபர்களை கொண்டு பாடசாலைகளில் ஒரு கட்டுக்கோப்பான நிர்வாகத்தினை ஆற்றிவருகின்றனர் அதே போன்று எமது வலய ஆசிரியர்களும் நிர்வாகத்திற்கு கட்டுபட்டு செயற்பட்டு வருகின்றமையை நான் மாகாண கல்விப் பணிப்பாளராக சென்றபோத உணரக்கூடியதாக உள்ளது. அதனை நினைத்து நான் பொருமையடைகின்றேன்.

எமது கிழக்கு மாகாணத்தை பார்த்தீர்களாக இருந்தால் ஐந்நூறுக்கும் மேற்பட்ட கணித ஆசிரியர்களின் பற்றாக்குறை காணப்படுகின்றது. இந்த பற்றாக்குறையை எங்களால் இலகுவாக பூர்த்தி செய்துவிடமுடியாது. அதற்காக நாங்கள் நீண்டகாலம் பயணிக்கவேண்டிய தேவை இருக்கின்றது. எனவே மாணவர்களை நாங்கள் கணித விஞ்ஞான துறைகளில் கற்பதற்கான சந்தர்ப்பத்தையும் வழிப்படுத்தல்களையும் மேற் கொள்ள வேண்டும். உங்களுக்கு நன்கு தெரியும் எதை விதைக்கின்றோமோ அதைத்தான் நாங்கள் அறுபடையாக பெறமுடியும். எனவே எமது மாகாணத்தில் கணித விஞ்ஞான துறைகளில் கற்கின்ற மாணவர்களினை ஊக்கப்படுத்தி அவர்களுக்கு வேண்டிய ஊக்கப்படுத்தல்களை மேற் கொள்ள வேண்டிய அவசியம் எமக்கு இருக்கின்றது. இந்துறைகளில் கற்கின்றவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதியின் பொருட்டு கூடுதலான கற்கை நெறிகளை தெரிவு செய்வதற்கான வாய்புக்கள் நிறையவே இருக்கின்றது. இதனூடாகத்தான் எதிர்காலத்தில் எமது மாகாணத்தில் கணித விஞ்ஞான அசிரியர்களின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு இலகுவாக இருக்கும் என எதிர்பார்க்கின்றேன். என அவர் இதன்போது தெரிவித்தார்.

# மீராவோடை உதுமான் பாலர் பாடசாலையின் 29 ஆவது மாணவர் வெளியேற்று விழா



(க.ருத்திரன்)

மட்டக்களப்பு கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபையினால் நிர்வாகித்து வரும் மீராவோடை உதுமான் பாலர் பாடசாலையின் 29 ஆவது மாணவர் வெளியேற்று விழா நேற்று நடைபெற்றது.பாலர் பாடசாலையின் தலைவர் என்.எம்.ஹனிபா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தவிசாளர் ஏ.எம். நௌபர் மற்றும் சபை உறுப்பினர் எஸ்.எ.அன்வர் ஆகியோர்கள் அதிதிகளாக கலந்து கொண்டனர்.இதன்போது மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றதுடன் வெளியேறிச் செல்லும் மாணவர்களை கௌரவிக்கும் முகமாக நினைவுச்சின்னங்களும் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டது.

இதன்போது தவிசாளர் ஏ.எம். நௌபர் தமது உரையின்போது தெரிவித்ததாவது.

சில பெற்றோர்கள் எண்ணிக்கொள்வது முன்பள்ளி என்பது எழுத்தை புத்தகத்தை படிப்பிக்கின்ற பாடசாலையாக எண்ணிக்கொண்டிருக்கின்றோம்.மாணவர்கள் முன்பள்ளியில் வந்து இயல்பாக சக மாணவர்களுடன் பழகி .விளையாடி,தங்களது கூச்சத்தினை இல்லாமல் செய்வதுடன் முதலாம் தரத்திற்கு செல்வதற்கான முன் அயத்தமான செயற்பாடுகளை மேற்கொள்ளும் நடவடிக்கையினையே முன்பள்ளி மேற்கொள்கிறது.

# சாதனையாளர்களை கௌரவிக்கும் ஸாஹிரா விருதுகள் 2021








(நூருள் ஹுதா உமர்)

கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரியில் கல்வி பயின்று கடந்த 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டில் சாதாரண தரத்தில் திறமை சித்தியெய்திய மாணவர்கள் மற்றும் கடந்த வருடங்களில் உயர்தரத்திலிருந்து பல்கலைக்கழகங்களுக்கு தெரிவான மாணவர்கள் மற்றும் பல்வேறு போட்டிகளில் தேசிய ரீதியாக சாதித்த மாணவர்கள் எனப் பலரும் பாராட்டி கௌரவிக்கப்படும் 'ஸாஹிரா விருதுகள் 2021 வழங்கி வைக்கும் நிகழ்வு கல்லூரி அதிபர் எம்.ஐ.எம். ஜாபிரின் தலைமையில் நேற்று (30) சாய்ந்தமருது தனியார் மண்டபத்தில் இடம்பெற்றது.

230 சாதனையாளர்கள் கௌரவிக்கப்பட்ட இந்நிகழ்வில் கல்லூரியின் பழைய மாணவரும், இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தருமான பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். மேலும் கௌரவ அதிதியாக கல்முனை வலயக் கல்விப்பணிப்பாளர் எஸ். புவனேந்திரன் கலந்து கொண்டார்.

மேலும் இந்நிகழ்வில் சாய்ந்தமருது கோட்டக்கல்வி அதிகாரி என்.எம். அப்துல் மலிக், கல்முனை கல்வி மாவட்ட பொறியியலாளர் ஏ.எம். சாஹீர், சாய்ந்தமருது மாளிகைக்காடு உலமா சபை தலைவர் எம்.எம்.சலீம், பாடசாலை அபிவிருத்தி குழு செயலாளர் டாக்டர் சனூஸ் காரியப்பர், அந்நூர் செரிட்டி நிறுவன பிரதிநிதி, பாடசாலை பிரதியதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி குழு பிரதிநிதிகள், பழைய மாணவர் சங்கங்களின் பிரதிநிதிகள், பிராந்திய பாடசாலைகளின் அதிபர்கள், ஸாஹிரா தேசிய கல்லூரியின் முன்னாள் அதிபர்கள், சாதனை படைத்த மாணவர்கள் அவர்களின் பெற்றோர்கள் மற்றும் கல்விமான்கள், புத்திஜீவிகள், முக்கியஸ்தர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களில் கடந்த காலங்களில் செயல்படுத்தப்பட்ட நிதி தோடர்பான வேலைத்திட்டங்களின் முன்னேற்ற அறிக்கை ஆய்வு

( வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மாவட்ட செயலக கணக்காய்வு முகாமைத்துவ குழுக்கூட்டம் வியாழக்கிழமை (30.12.2021) காலை 10.00 மணிக்கு அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளருமாகிய திருமதி.ஸ்டான்லி டிமெல் அவர்கள் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களில் கடந்த காலங்களில் செயல்படுத்தப்பட்ட நிதி தொடர்பான வேலைத்திட்டங்களின் முன்னேற்ற அறிக்கை தொடர்பாக ஆராயப்பட்டது. இது தொடர்பில் நீண்டகாலமாக முன்னெடுக்கப்படாமல் இருந்த வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும் அதன் நிதி தொடர்பான விடயங்களும் அதனை குறித்த காலத்தினுள் நிதியினை விடுவித்து வேலையினை முடிவுறுத்துவதற்கு ஆலோசிக்கப்பட்டது.

மேலும் மாவட்டத்தின் கணக்காய்வு முகாமைத்துவத்தினை எவ்வாறு சிறந்த முறையில் முன்கொன்டு செல்வது என்பது தொடர்பாகவும் திணைக்களங்களில் நிதியினை எவ்வாறு கையாள்வது அதனை முன்னெடுப்பதில் உள்ள சிக்கல் தொடர்பாக ஆராயப்பட்டு தீர்வூகளும் காணப்பட்டது.

இக்கூட்டத்தில் மேலதிக அரசாங்க அதிபர்இ திட்டமிடல் பணிப்பாளர்இ பிரதம கணக்காளர்இ உள்ளக கணக்காய்வாளர்இ சமுர்த்தி பணிப்பாளர்இ பிரதேச செயலாளர்கள்இ உதவி திட்டமிடல் பணிப்பாளர்கள்இ உள்நாட்டலுவல்கள் அமைச்சு மற்றும் நிதி அமைச்சின் அதிகாரிகள்இ மத்திய கணக்காய்வு உத்தியோகத்தர் மற்றும் பிரிவுகளின் தலைவர்கள் கலந்து கொண்டு தங்களின் கருத்துக்களை தெரிவித்தனர்.


Sj
SRI JEWELLERY
Swiss, Zürich இல் மிகப் பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்
பரம்பரை பரம்பரையாக நகைத் தொழிலில் அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்
வைர தாலி கொடி, மோதிரம், வளையல் பெயர் பெண்டன், மற்றும் அனைத்து நகைகளும் செய்து தரப்படும்.
திருத்த வேலைகளும் உடனுக்குடன் செய்து தரப்படும்.
+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch


Sikaram
துரிதபணமாற்றுச்சேவை
Sikaram INTL Gmbh
Heinrich Strasse 120, 8005 Zürich
sikaramgmbh@gmail.com / www.sikaram.com
Tel : 044 2410241
Fax : 044 2410245


Prasath Coiffeur
Öffnungszeiten
Mo -Fr 10.00-19.00
Sa 09.00-18.00
Heinrichstrasse 120, 8005 Zürich.
NAT:076 565 64 57


மாணிக்கப்போடி அறக்கட்டளை
REG.NO : TR/I/71
MANIKKAPODY TRUST
MUNAIKKADU, KOKKADDICHOLAI
முடிந்ததைச் செய்வோம்
முடிந்தவரை செய்வோம்


SwissLife
Select
சுவிசில் சொந்த வீடு
வாங்க விரும்பும் உறவுகளே,
அவதானமாகச் செயற்படுங்கள்.
உங்கள் கடனுக்கான வட்டி வீதம்
எப்போதும் அதிகரிக்க கூடும்.
எனவே, சரியான வங்கியையும்,
வட்டி வீதத்தையும்
தெரிந்து கொள்ளுங்கள்.
உங்கள் வாழ்வின் சகல
அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும்
ஒரே ஒரு நிறுவனம்...
மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி
Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.
Email : krishnasamy.thileepan@swisslife-select.ch
Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65


Seela Food Gastro AG
044 222 22 50
076 326 91 18
info@seelagastro.ch
www.seelagastro.ch
Züricherstrasse 15
8400 Winterthur.
Allegrotto Pizza Kurier
Allegrotto Pizza Kurier
Bederstrasse 102, 8002 Zürich.
044 280 40 30 | 076 326 91 18
Toll free 0844 80 40 30
pizzakingzurich@gmail.com.
www.allegrotto.ch


5ம், 6ம் ஆண்டு மாணவர்களுக்கான
புதிய கணினி வகுப்புக்கள் ஆரம்பம்
எங்கே? சூரிச் மாநகரில் கணினித்துறையில்
நூற்றுக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய
Online Tech Network
நிறுவனத்தில்
ECDL
Office
Windows 10
தொடர்புகளுக்கு
MANOJ MASTER
Online Tech Network
Militärstrasse 84, 8004 Zürich
043 811 80 90, 076 524 80 59

# யுத்தத்தால் வீழ்ந்து போன எம் தேசத்தைக் கட்டியெழுப்ப தென்னைப் பயிர் கைகொடுக்கும்

## அங்கஜன் இராமநாதன்

(த.சுபேசன்)

யுத்தத்தால் சிதைந்து போன எம் தேசத்தை மீளக் கட்டியெழுப்ப தென்னைப் பயிர்ச் செய்கை கைகொடுக்கும் எனப் பாராளுமன்ற உறுப்பினரும்,யாழ் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.வடமாகாணத்தில் தென்னை அபிவிருத்தி அதிகாரசபை அமைப்பது தொடர்பாக கொழும்பில் 28/12 செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற உயர் மட்டக் கலந்துரையாடலின் போது கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்;



ஜனவரி 10ம் தேதி தொடக்கம் 14ம் தேதி வரையான காலப்பகுதிக்குள் அமைச்சர் ரமேஸ் பத்திரன, இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்ணான்டோ,தென்னை அபிவிருத்தி அதிகாரசபைத் தலைவர்,அமைச்சின் உத்தியோகத்தர்கள்,வடமாகாணத்தில் வளங்களுக்கு பெறுமதி சேர்க்கவிருக்கும் நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டு உயர்ஸ்தானிகர்கள் அனைவரும் வடமாகாணத்திற்கு வருகை தந்து வடமாகாணத்திற்கான தென்னை அபிவிருத்தி அதிகாரசபைக்கான அலுவலகத்தை பளையில் ஆரம்பிக்கவுள்ளனர்.

சுபீட்சத்தின் நோக்கு கொள்கைத்திட்டத்திற்கு அமைவாக உள்ளூர் உற்பத்திகளை அதிகரித்து கிராமிய பொருளாதாரத்தினை கட்டியெழுப்ப வேண்டும் என்ற நோக்கில் வடமாகாணத்தில் தென்னை அபிவிருத்தி அதிகாரசபையின் பிராந்திய அலுவலகம் அமையப்பெறவுள்ளது.அமைச்சர் ரமேஷ் பத்திரன, இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்ணான்டோ மற்றும் தென்னை அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் கீர்த்தி வீரசிங்க ஆகியோருடன் பேசி வடமாகாணம் நாட்டின் மூன்றாவது தென்னை உற்பத்தி வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. வடக்கில் தென்னை வளம் உள்ள போதிலும் அதன் உற்பத்திப் பொருட்கள் முழுமையாக தென் பகுதிக்கு போய் சேர்ந்து விடுகின்றன.வடக்கிலும் பெறுமதி சேர்க்கும் நிறுவனங்கள் வரும் போது வடக்கு மக்களின் வாழ்வாதாரம் அதிகரிக்கும்,புதிய வேலை வாய்ப்புக்கள் உருவாகும்.வடக்கு மாகாணத்தில் குறிப்பாக யாழ்ப்பாணம்,கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களை உள்ளடக்கி மூன்றாவது தென்னை முக்கோண வலயம் உருவாக்கப்பட்டுள்ளது.

யுத்தம் முடிந்து பத்து வருடமாகியும் இன்றும் எமது பல பிரதேசங்கள் வறுமை நிலையில் உள்ளன.எமது மக்களின் வருமானம் அதிகரிக்க வேண்டுமானால் பிரதேச வளங்களை முழுமையாக பயன்படுத்த வேண்டும். வடக்கில் பனை,தென்னை ஆகிய வளங்கள் உள்ளன.யாழ் மாவட்டத்தில் மாத்திரம் பத்து இலட்சத்திற்கும் அதிகமான தென்னை மரங்கள் உள்ளன.எனவே வடக்கிற்கு உரிய பெறுமதி சேர்க்கும் நிறுவனங்கள் வரும் போது தென்னை உற்பத்திப் பொருட்களின் விலை அதிகரித்து மக்களின் வாழ்வாதாரம் உயரும்.என்றார்.

# திருமலையில் வெடித்த சமையல் எரிவாயு அடுப்பு





(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ் )

திருகோணமலை லிங்கநகர் முருகன் கோவில் 24ஆம் ஒழுங்கை சமையல் எரிவாயு அடுப்பு வெடிப்பு சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

நேற்று (30) பிற்பகல் சமையல் எரிவாயு அடுப்பு வெடித்துள்ளது.

இந்த வெடிப்பு சம்பவம் இனறு சமைத்து கொண்டிருக்கும் போது இல்லத்தரசியும் அவரது கணவரும் சமையல் அறையில் சமையல் செய்து கொண்டிருந்த போது இவ் வெடிப்பு சம்பவம் நிகழ்ந்துள்ளது.

இவ் சமையல் எரிவாயு அடுப்பு வெடிப்பு சம்பவத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை எனவும்

சமையல் எரிவாயு அடுப்பு வெடிப்பு சம்பவத்தின் போது கணவர் அருகில் இருந்தமையினால் தீ கட்டுப்படுத்த பட்டதாகவும் பாதிக்க பட்ட இல்லத்தரசி தெரிவித்தார்

சமையல் எரிவாயு அடுப்பு வெடிப்பு சம்பவம் தொடர்பில் திருகோணமலை தலைமையக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# திருக்கோவில் போலிஸாருக்கு உடனடி இடமாற்றம்

(பைஷல் இஸ்மாயில் )

அம்பாறை, திருக்கோவில் பொலிஸ் நிலையத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற துப்பாக்கி சூட்டு சம்பவத்தை அடுத்து அங்கு கடமையாற்றிவரும அனைத்து பொலிஸாரையும் உடன் இடமாற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், இந்த சூட்டு சம்பவம் தொடர்பாக பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் விசாரணை இடம்பெற்றுவருவதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த 24 ஆம் திகதி இரவு பொலிஸ் சாஜன் ஒருவர் பொலிஸார் மீது மேற்கொண்ட துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் 4 பொலிஸார் உயிரிழந்ததுடன் 3 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன் துப்பாக்கி சூடு நடாத்திய பொலிஸ் சாஜன்துப்பாக்கிகளுடன்பொலிஸ் நிலையத்தில் சரணடைந்த நிலையில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்த துப்பாக்கி சூட்டு சம்பவம் தொடர்பாக சம்பவ இடத்திற்கு பொலிஸ் மா அதிபர், கிழக்கு பிராந்திய சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் உட்பட பல பொலிஸ் அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு சென்று நிலமைகளை ஆராய்ந்து இச் சம்பவம் தொடர்பாக பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்த நிலையில் குறித்த பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் அனைவரையும் முதலில் இடமாற்றுமாறு ஆலோசனையின் கீழ், கட்டம் கட்டமாக கடமையாற்றிவரும் பொலிஸாரை இடமாற்றும் நடவடிக்கை இன்று வியாழக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் குற்றத் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி உட்பட சிலர் உடனடியாக வேறு பொலிஸ் நிலையங்களுக்கு இடமாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சாவகச்சேரியில் கேரளக் கஞ்சாவுடன் ஒருவர் கைது

(த.சுபேசன்)

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கைதடிநுணாவில் பகுதியில் 30/12/2021 வியாழக்கிழமை காலை ஒரு கிலோவிற்கும் மேற்பட்ட கேரளக் கஞ்சாவுடன் நபர் ஒருவர் கைதாகியுள்ளார்.

சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்ன வின் வழிகாட்டுதலில் உப பொலிஸ் பரிசோதகர்களான பண்டார மற்றும் நினாஸ் ஆகியோர் தலைமையிலான பொலிஸ் குழுவினர் குறித்த கைது நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.கைதான நபரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கையை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# காத்தான்குடி கடலில் சிறிய மீன்படி படகு மூழ்கியதில்

## இரு மீனவர்களும் உயிர் தப்பிய நிலையில் கரையை வந்தடைந்தனர்

(ஜவ்பர் ஹான்)

காத்தான்குடி கடலில் நேற்று (30) வியாழக்கிழமை காலை மீன் பிடிக்கச் சென்ற சிறிய மீன்படி படகு ஒன்று கடலில் மூழ்கியதில் அதில் சென்ற இரு மீனவர்களும் உயிர் தப்பிய நிலையில் கரையை வந்தடைந்தனர்.

வழமை போன்று வியாழக்கிழமையும் காலை 6 மணிக்கு காத்தான்குடி ஏத்துக்கால் கடலுக்கு இரு மீனவர்கள் சிறிய மின்பிடி படகில் மீன்பிடிக்கச் சென்றுள்ளனர்.

இதன் போது கடலில் சுழல் காற்று ஒன்று திடீரென வீசியதால் அந்த மீன்பிடி படகு கவிழ்ந்துள்ளது. அதில் சென்ற இரு மீனவர்களும் கடலில் மூழ்கிய நிலையில் குறித்த மீனவர்கள் இருவரும் மூழ்கிய நிலையில் அம் மீன்பிடி படகில் தொங்கிக் கொண்டிருந்துள்ளனர்.

இதனை அறிந்த கரையில் நின்ற மீனவர்கள் மீன்பிடி படகொன்றில் கடலுக்கு சென்று குறித்த இரு மீனவர்களையும் காப்பாற்றிக் கொண்டு கரைக்கு வந்து சேர்ந்தாக மீனவர்கள் தெரிவித்தனர்.

கடலில் மூழ்கிய சிறிய மீன்பிடி படகை எடுப்பதற்கு முயறச்சிகளை மேற் கொண்டுவருவதாகவும் மீனவர்கள் தெரிவித்தனர்;.

கடலில் மூழ்கி உயிர்தப்பிய இருமீனவர்களும் புதிய காத்தான்குடியைச் சேர்ந்த மீனவர்களாகும்.

# மன்னாரில் கோவிட் தோற்றாளர் ஒருவர் மரணம் மோத்த எண்ணிக்கை 34 ஆக உயர்வு

( வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மாவட்டத்தில் 29.12.2021 அன்று கொவிட் தொற்றாளர் ஒருவர் உறுதிபடுத்தப்பட்ட நிலையில் ஒருவர் கொவிட் தொற்றுக்கு உள்ளாகி இறந்த சம்பவமும் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ரி.வினோதன் கொவிட் தொடர்பான தனது நாளாந்த அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது

29.12.2021 புதன்கிழமை மன்னார் மாவட்டத்தில் மன்னார் பொது வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் ஒருவருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் ஒருவர் கொவிட் தொற்றுக்கு உள்ளாகி இந்நாளில் மரணத்தை தழுவிக் கொண்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் இவ்வளவு நாட்களாக இருந்துவந்த கொவிட் தொற்றாளர்களின் மரணம் 33 லிருந்து தற்பொழுது இது 34 ஆக உயர்ந்துள்ளது.

இந்த மாதம் (டிசம்பர்) மேற்கொள்ளப்பட்ட 20 பி.சி.ஆர். பரிசோதனையிலும் 3356 அன்டிஜென் பரிசோதனையிலும் 246 பேர் கொவிட் தொற்றாளர்களாக உறுதிபடுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கொவிட் தடுப்பூசியில் முதலாவது தடுப்பூசி 81262 பேருக்கும். இரண்டாவது தடுப்பூசி 75501 நபர்களுக்கும் பூஸ்டர் தடுப்பூசி 16250 பேருக்கும் ஏற்றப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.






# மட்டு. அம்பாறை விஞ்ஞான ஒன்றியத்தின் பரிசளிப்பு விழா







(வி.ரி.சகாதேவராஜா)

மட்டு. அம்பாறை விஞ்ஞான ஒன்றியம் மற்றும் 15ம் கிராமம் பொது நூலகத்தின் ஏற்பாட்டில் வருடாந்த பரிசளிப்பு விழா நாவிதன்வெளி பிரதேச செயலக கலாசார மண்டபத்தில் இடம் பெற்றது.

15ம் கிராமம் பொது நூலகத்தின் தலைவர் கே.துஷ்ஷந்தன் தலைமையில் மட்டு அம்பாறை விஞ்ஞான ஒன்றியத்தின் தலைவர் கே.கோபிநாத்தின் ஒழுங்கமைப்பில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பிரதம அதிதிகளாக நாவிதன்வெளி பிரதேச செயலாளர் எஸ்.ரங்கநாதன் நாவிதன்வெளி பிரதேச சபையின் தவிசாளர் கௌரவ அ.ஆனந்தன் ஆகியோர் கலந்துசிறப்பித்தனர்.

விசேட அதிதிகளாக நாவிதன்வெளி இலங்கை வங்கி முகாமையாளர் கே.சசிதரன் ,வேப்பையடி கலைமகள் மகா வித்தியாலய அதிபர் என்.பிரபாகர் ,7ம் கிராமம் நாமகள் வித்தியாலய அதிபர் எம்.இராஜகோபால் மற்றும் சண்முகா வித்தியாலய அதிபர் ஈ.முரளிதரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

வாசிப்பு மற்றும் கட்டுரை போட்டிகளில் வெற்றி பெற்ற 33 மாணவர்களுக்கான சான்றிதழ்களும் வெற்றிக்கிண்ணங்களும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஆண்டு முழுவதும் தேவ அன்னை பாதுகாப்பாள் என்ற நம்பிக்கையோடு புதிய ஆண்டை தோடங்குங்கள்

## யாழ் ஆயர் யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை

( வாஸ் கூஞ்ஞ)

2022ஆவது புதிய ஆண்டு மலருகின்ற வேளை இப்புத்தாண்டைக் கொண்டாடும் அனைவருக்கும் இப்புதிய ஆண்டு உங்கள் உள்ளத்து எண்ணங்கள் ஏக்கங்கள் அனைத்தையும் நிறைவு செய்யும் இறை ஆசீர் மிக்க ஆண்டாக அமைய முதலில் வாழ்த்துகிறோம்.

உலகக் கத்தோலிக்க திருச்சபையானது புதிய ஆண்டின் முதல் தினத்தை தேவ அன்னையின் தினமாகப் பிரகடனப்படுத்தி அன்றைய தினத்தில் ஆண்டு முழுவதிற்குமான அன்னையின் தாய்க்குரிய அன்பையும் பாசமிகு பராமரிப்பையும் இறை பாதுகாப்பையும்; பெற வேண்டும்படி பணித்து நிற்கிறது.

நான் ஆண்டவரின் அடிமை உமது சொற்படியே எனகது நிகழட்டும்; (லூக்கா1:38) என்று தேவ அன்னை இறைசித்தத்தை ஏற்று இறைவனின் தாயாகவும் இறை மக்களின் தாயாகவும் விளங்கி உலக மக்கள் அனைவரையும் பாதுகாத்துப் பாரமரித்து வருகிறாள்.

கடந்த ஆண்டு பல இன்பமான அனுபவங்களையும் பல துன்பமான அனுபவங்களையும் தந்து எம்மை விட்டுக் கடந்து சென்று விட்டது. புதிய ஆண்டு எப்படி அமையுமோ என்ற ஏக்கமும் இனியதாய் அமைய வேண்டும் என்ற எதிர்பார்ப்பும் எம் எல்லோர் மனதுகளிலும் நிறையவே உண்டு. இப்புதிய ஆண்டு முழுவதும் தேவ அன்னை எம்மைப் பாதுகாப்பாள் என்ற நம்பிக்கையோடு புதிய ஆண்டை தொடங்குங்கள்;;. ஆண்டு முழுவதிலும் தேவ அன்னையின் தாய்க்குரிய அன்பையும் பாசமிகு பராமரிப்பையும் இறை பாதுகாப்பையும்; வேண்டித் தினமும் மன்றாடுங்கள். தேவ தாயை எப்போதும் எங்கிருந்தாலும் என்ன நடந்தாலும் உங்கள் அன்னையாக மனதிலிருத்தி;; என்ன செய்தாலும் அன்னையின் துணையுடன் செய்யுங்கள். அன்னை வெற்றியையே பெற்றுத் தருவாள்.

இறைவனின் அன்னையும் இறைமக்களின் அன்னையுமான தேவ அன்னை தாய்க்குரிய அன்போடு எம் அனைவரையும் இவ்வாண்டு முழுவதும் பாதுகாத்து எத்தீங்குமின்றி வழிநடத்தி எம் அனைத்துத் தேவைகளிலும் நிறைவு செய்ய இறையாசீர் மிக்க வாழ்த்துக்களை தெரிவிக்கிறோம் என யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை இவ்வாறு தனது புதவருட வாழ்த்து செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

# திருகோணமலை மாவட்ட செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒளிவிழா நிகழ்வு

(ஹஸ்பர்)









திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாடிகோராளவின் வழிகாட்டலுமைக்கமைய திருகோணமலை மாவட்ட செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒளிவிழா நிகழ்வுகள் நேற்று முன்தினம் (29) மாவட்ட செயலகத்தில் மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ். அருள்ராஜ் தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட செயலகத்தில் நத்தார் உட்பட ஏனைய சமயங்களின் முக்கிய வைபவங்கள் அனைத்து உத்தியோகத்தர்களது பங்களிப்புடன் நடைபெற்று வருவதாகவும் இதன்மூலம் நல்லிணக்கத்தை கட்டியெழுப்ப ஏதுவாக அமையும் என்று இதன்போது மேலதிக அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

நத்தார் பண்டிகையின் உண்மையான அர்த்தமாக அமைவது இயேசுநாதர் எடுத்துரைத்த விடயங்களை அவரவர் உள்ளத்தில் எடுத்துக் கொண்டு நடந்து கொள்வதாகும் என்று இதன்போது விசேட நத்தார் செய்தி வழங்கிய தம்பலகாமம் புனித பாத்திமா மாதா ஆலயத்தின் அருட்தந்தை எஸ்.ஆர்.ஜெயரட்னம் தெரிவித்தார்.

கரோல் கீதங்களை பாடிய மாணவிகளுக்கு அருட்தந்தை மற்றும் மேலதிக அரசாங்க அதிபர் ஆகியோர் இணைந்து பரிசில்களை இதன் போது வழங்கினர்.

இந்நிகழ்வில் மாவட்ட செயலக பதவிநிலை உத்தியோகத்தர், சக உத்தியோகத்தர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# அக்கரைப்பற்றின் சாதனை மாணவி தர்ஷிக்காவினை ஆலையடிவேம்பு பிரதேச இந்துமாமன்றம் கௌரவித்தது

(வி.சுகிர்தகுமார்)

அக்கரைப்பற்றின் சாதனை மாணவி தர்ஷிக்காவினை ஆலையடிவேம்பு பிரதேச இந்துமாமன்றம் கௌரவித்தது. கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பொதுப் பட்டமளிப்பு விழா நிகழ்வின்போது 13 தங்கப் பதக்கங்களை பெற்று சாதனை படைத்த அக்கரைப்பற்றினைச் சேர்ந்த மருத்துவர் தணிகாசலம் தர்ஷிகாவின் வீட்டிற்கு நேற்றிரவு சென்ற ஆலையடிவேம்பு பிரதேச இந்துமாமன்றத்தினர் வாழ்த்தினை தெரிவித்துக்கொண்டதுடன் பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னமும் வழங்கி கௌரவித்தனர்.

ஆலையடிவேம்பு பிரதேச இந்துமாமன்றத்தின் தலைவரும் ஓய்வு பெற்ற அதிபருமான வே.சந்திரசேகரம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் செயலாளர் அதிபர் மணிவண்ணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு கலந்து சிறப்பித்தனர்.

ஆலையடிவேம்பு பிரதேச இந்துமாமன்றத்தின் உபதலைவரான தர்ஷிகாவின் தந்தை தாய் உள்ளிட்ட குடும்பத்திற்கும் வாழ்த்தினை தெரிவித்த மன்றத்தின் தலைவர் உள்ளிட்டவர்கள் இணைந்து தர்ஷிக்காவுக்கான நினைவுச் சின்னத்தினை வழங்கி வைத்தனர்.

இந்நிகழ்வில் கருத்துதெரிவித்த ஆலையடிவேம்பு பிரதேச இந்துமாமன்றத்தினர் தர்ஷிக்கா போன்ற சாதனையாளர்களை கௌரவிப்பதில் பெருமையுடன்மகிழச்சியுறுவதாகவும் குறிப்பிட்டனர்.

சாதனை மாணவி தர்ஷிக்கா ஆலையடிவேம்பு பிரதேச இந்துமாமன்றத்தினருக்கு நன்றி கூறியதுடன் தனது சாதனை அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டார்.

தமது குடும்பம், ஆசிரியர்கள், நல்ல நண்பர்கள், விடாமுயற்சி என்பன தனது சாதனைக்கு வித்திட்டதனையும் அவர் நினைவுகூர்ந்தார்.

# பிரியாவிடை நிகழ்வும் வருடஇறுதி ஒன்றுகூடலும்!





(காரைதீவு நிருபர் வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவு பிரதேசசபை ஊழியர்கள் நலன்புரிச்சங்கம் ஏற்பாடுசெய்த பிரியாவிடை நிகழ்வும் ,வருட இறுதிஒன்றுகூடல் நிகழ்வும் நேற்று காரைதீவு விபுலாநந்த கலாசார மண்டபத்தில் சபைச்செயலாளர் அ.சுந்தரகுமார் தலைமையில் நடைபெற்றது.

பிரதமஅதிதியாக பிரதேச சபைத் தவிசாளர் கிருஸ்ண பிள்ளை ஜெயசிறில், கௌரவ அதிதியாக உபதவிசாளர் ஏ.எம். ஜாகீர், சிறப்பதிதிகளாக சபை உறுப்பினர்களான எம்.எச்.எம்.இஸ்மாயில் ,ச.சசிகுமார், த.மோகனதாஸ், ச.நேசராசா,என்.எம்.எம்.றணீஸ் ,எம்.எஸ்.ஜலீல், ஆர்.எம்.பஸ்மீர் ஆகியோர் கலந்துசிறப்பித்தனர். ஓய்வுபெற்று மற்றும் இடமாற்றலாகிச்சென்ற உத்தியோகத்தர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.



வருடஇறுதி ஒன்றுகூடலில் ஊழியர்களின் கலைநிகழ்ச்சிகள், பாடல்கள் ,ஊழியர்களின் பிள்ளைகளின் கலை நிகழ்ச்சிகள் அனைத்தும் மேடையேறின.

# கலைஞர்கள் ஒரு பிரதேசத்தின் கலைச் சின்னங்கள்

## பதில் மாவட்ட செயலாளர் ஜெகதீஸன் தெரிவிப்பு

(றாசிக் நபாயிஸ், ஏ.எச்.எம்.ஹாரிஸ்)

பிரதேசத்தில் வாழ்கின்ற கலைஞர்கள் அந்த பிரதேசத்தை பிரதிபலிக்கின்ற கலைச் சின்னங்கள் என அம்பாறை மாவட்ட பதில் மாவட்ட செயலாளர் வி.ஜெகதீஸன் தெரிவித்தார். நாவிதன்வெளி பிரதேச கலை இலக்கிய விழா பிரதேச செயலாளர் எஸ். ரங்கநாதன் தலைமையில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும்போதே பதில் மாவட்ட செயலாளர் இந்த கருத்தை தெரிவித்தார். மேலும் கருத்து தெரிவிக்கையில்,

எமது பிரதேசத்தில் வாழ்கின்ற கலைஞர்களை கௌரவிக்கும் வகையில் பிரதேச செயலகம் வருடம் தோறும் விழாக்களை நடத்தி வருகின்றது. பிரதேச செயலாளர்கள் மற்றும் பிரதேச கலைஞர்கள் இதற்கு ஒத்துழைப்பு வழங்கி கொண்டிருக்கும் அதேவேளை பிரதேசத்தில் இருக்கின்ற கலைஞர்கள் கலை இலக்கிய செயற்பாடுகளில் வெற்றி பெற்று அந்த விடையங்களில் வேர் ஊன்றி சமூகத்தை வழிகாட்டுவதற்குரிய பாரிய பங்கு இதன் மூலமாக கிடைக்கின்றன. கலைஞர்களை ஊக்கப்படுத்தும் வகையில் அவர்களுக்கு கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஊடாக அடையாள அட்டைகள் வழங்கப்படுகிறது. வயது முதிர்ந்த காலகட்டத்தில் ஒய்வூதிய திட்டங்களை வழங்குகின்றது, கலைப்படைப்புகளை பிரசுரிக்க கூடிய ஏற்பாடுகளை செய்துள்ளது. அதேபோன்று கலாபூசணம் என்கின்ற உயர்ந்த விருது வழங்கப்படுகின்றது. இந்த ஆண்டில் அம்பாரை மாவட்டத்தில் ஆறு தமிழ் மொழிமூல கலைஞர்களுக்கு இவ்விருது கிடைக்க பெற்றுள்ளமை பாராட்டுக்குரியதாகும்.

மேலும் மாகாண ரீதியாக வழங்கப்படுகின்ற முதலமைச்சர் விருது ஏனைய விருதுகள், பிரதேச மட்டத்தில் கலைஞர்களுக்கான 'சுவதம்' வேலைத் திட்டம் அவர்களின் குடும்பத்தோடு கௌரவிக்கும் வகையில் கலாச்சார திணைக்களத்தினால் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன.

கலை இலக்கியச் செயற்பாடுகளில் இளம் மாணவர்களையும் அழைத்து செல்ல பாடசாலை மட்டத்தில் கலை இலக்கியப் போட்டிகள் நடாத்தப்படுகின்றன. பெற்றோர்கள், ஆசிரியர்கள் இதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக்கொடுப்பதன் ஊடாக இளம் கலைஞர்களை உருவாக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் கிடைக்கும். வெறுமனே பாடப்புத்தகங்களை மையமாக வைத்த கல்வித் திட்டத்தை நோக்கி போகாமல் அதனோடு இணைந்து பல்துறை சார்ந்த செயற்பாடுகளில் ஈடுபடுத்தி செல்லும் போது ஆளுமை நிறைந்த சமூகத்தை உருவாக்க முடியும் என்றார்.

நாவிதன்வெளி பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தகர் ஏ.எல்.எம்.ஷினாஸின் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இந்த விழாவில், மூத்த கலைஞர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களின் பல கலை நிகழ்வுகள் இடம்பெற்றதோடு, போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்ற கலைஞர்களுக்கு பரிசில்களும், நினைவுச் சின்னங்களும், சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இலக்கிய அதிதியாக பிரபல எழுத்தாளரும் விமர்சகருமான டாக்டர் புஷ்பலதா லோகநாதன் கலந்து கொண்டதுடன், கௌரவ அதிதிகளாக

நாவிதன்வெளி பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் பி.பிரணவரூபன், கணக்காளர் கே.றிஸ்வியஹ்ஸர், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி இ.லதாகரன், நிருவாக உத்தியோகத்தர் கே.யோகேஸ்வரன் மற்றும் விசேட அதிதியாக அம்பாறை மாவட்ட செயலக மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரி.எம்.றின்சான் அவர்களும் கலந்து கொண்டனர்.

# கல்முனையில் 03 வீதிகளுக்கு புதிய பெயர்களை சூட்ட மாநகர சபை தீர்மானம்



(அஸ்லம் எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட 03 உள்ளூர் வீதிகளுக்கு புதிய பெயர்களை சூட்டுவதற்கான பிரேரணைகள் மாநகரசபையில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

கல்முனை மாநகர சபையின் 45ஆவது மாதாந்த பொதுச்சபை அமர்வு புதன்கிழமை (29) பிற்பகல், மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது கல்முனை முதலாம் பிரிவிலுள்ள ஆஸ்பத்திரி 04ஆம் குறுக்கு வீதியின் பெயரை கிராம அபிவிருத்தி சங்க வீதி எனவும் அதே பிரிவிலுள்ள எல்லை வீதி 06ஆம் குறுக்கு வீதியின் பெயரை ஸ்ரீ நாகதம்பிரான் ஆலய வீதி எனவும் மாற்றுவதற்கான பிரேரணைகளை தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினரான ஹென்றி மகேந்திரன் சமர்ப்பித்து, அதற்கான காரணங்களை எடுத்துக் கூறினார்.

இப்பிரேரணைகளை தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் எஸ்.குபேரன் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஏ.ஆர்.அமீர் ஆகியோர் வழிமொழிந்து ஆமோதித்தனர். இதையடுத்து சபையில் ஆட்சேபனை எதுவும் தெரிவிக்கப்படாத நிலையில், இப்பிரேரணைகள் ஏகமனதாக நிறைவேற்றப்படுவதாக முதலவர் அறிவித்தார்.

அதேவேளை, சாய்ந்தமருது முதலாம் பிரிவிலுள்ள பத்தாஹ் பள்ளிவாசல் அமைந்துள்ள பாதைக்கு பத்தாஹ் பள்ளி வீதி என பெயர் சூட்டப்பட்ட வேண்டும் என சாய்ந்தமருது சுயேட்சைக்குழு உறுப்பினர் என்.எம்.ரிஸ்மீர் முன்மொழிய, அதே சுயேட்சைக்குழு உறுப்பினரான எம்.எஸ்.ஏ.றபீக் வழிமொழிந்து ஆமோதித்தார். இதற்கு முதல்வர் அனுமதி வழங்கியதுடன் சபை அங்கீகாரமும் வழங்கப்பட்டது.

குறித்த மூன்று வீதிகளுக்கும் புதிய பெயர்களை சூட்டுவதற்காக நிறைவேற்றப்பட்ட இத்தீர்மானங்களின் பேரில் வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவதற்காக மேற்கொண்டு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைளை முன்னெடுக்குமாறு சபைச் செயலாளருக்கு முதலவர் பணிப்புரை விடுத்தார்.





# கட்டைபறிச்சான் பெரிய பாலம் உறுதியான தன்மையை இழந்து விட்டது!

## பாலத்தை அண்டிய இயற்கை அழகும் பாதுகாக்கப்பட வேண்டும்

(அ . அச்சுதன் )

திருகோணமலை மாவட்டத்தில் மூதூரையும், மூதூர் கிழக்கையும் எல்லைப்படுத்துவதாக உள்ள கட்டைபறிச்சான் ஆற்றைக் கடப்பதென்பது அன்று பெரும் சவாலானதும் ஆபத்தானதுமாகும். இடிமண் துறை என்று கூறும் இத்துறையினைக் கடக்க 1900 காலப்பகுதிக்கு முன்னர் மரத்தினாலான வள்ளங்கள் பயன் படுத்தப்பட்டுள்ளன.

1929 இல் பிரிட்டிஸ் அரசினால் இரும்பிலான மிதவைப் பாலம் போடப்பட்டிருந்தது.பின்னர் நிரந்தரமான இப் பாலத்துக்கான அடிக்கல்லை 1976 தை மாதம் 31 ஆம் திகதி அப்போது தகவல் ஒலிபரப்பு பிரதியமைச்சரும், திருகோணமலை மாவட்ட அரசியல் அதிகாரியும், மூதூர் தொகுதி முதலாவது தேசிய அரசுப் பேரவை உறுப்பினருமான ஏ.எல். அப்துல் மஜீத் அவர்களால் நாட்டிவைக்கப்பட்டு, 1978 இல் மக்கள் போக்குவரத்துக்காக திறந்து வைக்கப்பட்டது.

43 ஆண்டுகள் கடந்த நிலையில் பாலத்தின் கட்டுமானப் பகுதிகள் உடைந்தும், வெடித்தும் காணப்படுகின்றன. குறிப்பாக 1985 இல் திருகோணமலை மாவட்ட மக்களுக்கு முதலில் நினைவுக்கு வருவது கட்டைபறிச்சான் பெரிய பாலம் இலங்கை வரலாற்றில் திருகோணமலை மாவட்டத்தில் முதலாவது கண்ணிவெடி தாக்குதல் இராணுவ ஜீப் வண்டி தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் கண்ணிவெடியில் சிக்கியது பெரிய பாலத்திற்கு அருகில் அன்று இவ் விடயம் மூலம் இப் பாலம் அனைவரையும் பார்க்க வைத்தது.

கடந்த இராணுவ நடவடிக்கைகளின் போதும், மூதூர் கிழக்கு மீள் குடியேற்ற நடவடிக்கைகளின் போதும் கனரக வாகனங்களின் போக்குவரத்துக்கு ஒரேயொரு பாதையாகவிருந்த இப் பாலம் தனது உறுதியான தன்மையை இன்று இழந்துள்ளது.

பாலம் சேதமடைந்த விடயம் பலராலும் அறியப்பட்டிருந்தாலும் பாலம் புனரமைப்புக்கான எந்த நடவடிக்கையும் எவராலும் மேற்கொள்ளப்படாத நிலையில்



திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் அவர்களால் கடந்த 02072021, அன்றும் 03072021 அன்றும் புனரமைப்புக்கான இரு நாள்கள விஜயம் மேற்கொள்ளப்பட்டது.

மூதூர் பிரதேச சபையின் கட்டைபறிச்சான் வட்டார உறுப்பினர் திருமதி. த. ஜெயமாலா அவர்களின் கோரிக்கையை ஏற்று மூதூர் பிரதேச சபையின் தவிசாளர் எம்.எம்.ஏ.அரூஸ் அவர்களின் அழைப்பின் பேரில் வருகை தந்த நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் பாலத்துக்கு நேரடி விஜயம் செய்து பாலத்தின் சேதங்களையும், சுற்றாடலையும் பார்வையிட்டிருந்தார்.

ஆனால் இதுவரை புனரமைப்புக்கான வேலைகள் இடம் பெறவில்லை எனவே விரைவில் இப் பாலத்தைப் புனரமைக்காவிடின் மூதூர் கிழக்கில் உள்ள கட்டைபறிச்சான் , சேனையூர் , ,கடற்கரைச்சேனை, சந்தேசபுரம், சம்பூர், கூனித்தீவு,சூடைக்குடா,பாட்டாளிபுரம், இளக்கந்தை, பள்ளிக்குடியிருப்பு உட்பட





சுமார் 13 கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த 8000 இற்கும் மேற்பட்ட மக்களின் ஜீவனோபாயம், சுகாதாரம், கல்வி,மருத்துவம், தொடர்பாடல் என்பன மிக நெருக்கடிக்குள்ளாவது திண்ணம்.

இதற்கு காரணம் மூதூர் கிழக்குப் பிரிவிலுள்ள கிராம மக்கள் தமது தேவைகளை நிறைவு செய்வதற்கும் தமது பிரதேசத்தில் உற்பத்தி செய்யும் விவசாயப் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கும் கட்டைபறிச்சான் பெரிய பாலத்தை கடந்துதான் மூதூர் நகருக்கு செல்ல வேண்டும் . மூதூர் கிழக்கில் சம்பூர், சேனையூர் ,பாட்டாளிபுரம் பகுதிகளில் பிரதேச, கிராமிய வைத்தியசாலைகள் இயக்குகின்ற போதும் மேலதிக சிகிச்சைகளுக்கு இப்பகுதி மக்கள் மூதூர் நகருக்குத்தான் செல்ல வேண்டும் மாணவர்கள் உயர் தொழில்நுட்ப கல்வியை கற்பதற்கும் வேலை வாய்ப்புக்களை பெற்று உயர் நிலைக்கு வருவதற்கும் இப் பாலத்தை கடந்துதான் பயணிக்க வேண்டும். சம்பூர் மூதூருக்கான பிரதான போக்குவரத்துக்கும் இப்பாலம் முக்கியத்துவம் பெருகின்றது.

மேற்படி கட்டைபறிச்சான் பெரிய பாலமானது தற்போதைய நிலையில் மக்கள் பாவனைக்கு பொருத்தமற்றுக் காணப்படுகின்றது. மூதூர் கிழக்கு பிரதேசத்துக்குள் பிரவேசிப்பதற்கான பிரதான பாலம் இதுதான் இப்பாலம் உடைப்பெடுக்குமாயின் தரைப் போக்குவரத்து மார்க்கம் தடைப்படும் அபாயம் ஏற்படலாமெனவும் அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை கட்டைபறிச்சான் பாலத்தை அண்டிய பகுதிகள் மூதூர் கிழக்குக்கும் மூதூர் நகரிற்கும் அழகு தரும் கண்டல் தாவரங்கள் காணப்படுகின்றன.

கண்டல் தாவர சமூகம் தான் வாழும் இடத்திற்கு பெரிய உதவி செய்கிறது இதில் முக்கிய பங்கு இதன் இலை குழைகள் கீழ்விழுந்து நீர்மூலம் கடத்தப்பட்டு அங்குள்ள களப்பு கழிமுகம் பகுதியில் மீன் இனங்கள் தமது இனப்பெருக்க இடமாக பயன் படுத்தி வாழ்கின்றன. இங்கு இனப்பெருக்கம் இளம் குஞ்சுகளின் வளர்ச்சி போன்றவற்றுக்கு சிறந்த சூழல் காணப்படுகின்றது.

காற்று சூறாவளி போன்ற வற்றினால் ஏற்படும் அழிவைத்தடுக்க உதவுகின்றது. பொதுவாக கண்டல்தாவரங்கள் காற்று புயல் போன்ற அமைதியின்மையை தாங்கி பாதுகாக்கின்றது. அதாவது சக்தியை உறிஞ்சுகின்ற தன்மையைக் கொண்டுள்ளது. இந்த நிலையில் கட்டைபறிச்சான் பாலத்தை அண்டிய வீதிக்கு அருகில் கழிவுப் பொருட்கள் கொட்டப்படுகின்றன.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன் பிரதேச சபையினால் பயன்படுத்தப்பட்ட குப்பை மேடு பல முறைப்பாடுகளின் பின்னர் அகற்றப்பட்டதுடன் சுற்று வேலியும் அமைக்கப்பட்டது பாதுகாக்கப்பட்டது. ஆயினும் தற்போது மீண்டும் அப்பகுதியில் குப்பைகள் கழிவுப் பொருட்களை காணமுடிகின்றது. இவ்விடயத்தில் மூதூர் பிரதேச சபை சம்மந்தப்பட்டவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். அழகான இயற்கை வனப்புமிக்க இப்பகுதியை பாலத்தை பாதுகாக்க வேண்டியது காலத்தின் தேவையாகும்.

தற்போது மூதூர் பிரதேசத்தில் பல உட்கட்டுமான அபிவிருத்தி வேலைகள் அரசினால் முன்னெடுக்கப்படுகின்றது எனவே இப் பாலத்தையும் இப் பகுதியையும் புனரமைக்க சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.


நாள் தோறும்
சுபீட்சம் மின்னிதழை
பார்வையிட
www.supeedsam.com


SAYENTHIRAN KATHIR
Geschäftsführer
S TRAVEL
Flugtickets | Hotels | Reiseversicherungen
Luisenstr 21 8005 Zurich | info@stravel.ch www.stravel.ch
044 419 91 00 079 913 77 59


"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமூகத்தை
கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206


கிழக்கிலங்கையின் காரைதீவில் வெளிநாட்டு
துரித பொதிகள் சேவையில் புதிய பரிணாமம்
வெளிநாட்டில் இருக்கும் உங்கள்
உறவுகள் நண்பர்களுக்கு பொதிகள்
மற்றும் ஆவணங்களை துரித
வேகத்தில் உரிய முகவரியில்
கொண்டு சேர்க்க
இன்றே நாடுங்கள்
TA parcel.lk
LOCAL & INTERNATIONAL COURIER SERVICE
TA ENTERPRICES & CO வின்
TA PARCEL.LK
துரித வேகம். London, Swiss, France, Canada 3 Days Only) Quick Service
உலகின் எப்பாகத்திற்கும் பொதிகள் அனுப்பும் வசதி. All Countries
பொதிகள் முழு (100%) காப்புறுதி செய்யப்படுகின்றது. 100% Insured
365 நாட்கள் 24 மணி நேர வாடிக்கையாளர்கள் சேவை. 365 Days 24 Hours Service
உரிய முகவரியில் கொண்டு சேர்க்கப்படும். Door to Door Delivery
இணையத்தளம் மூலம் உங்கள் பொதிகள் எங்கு உள்ளது என கண்டறியும் வசதி. Online Tracking System
சிறந்த பொதியாக்கம். Quality Packing
நீங்கள் பொதிகள் ஒப்படைக்கும் போதே Traking Number வழங்கப்படும்.
இவ்வாறான நம்பகதன்மைகளுடன்
உங்கள் உறவுகளின் எதிர்பார்ப்புகளை
கொண்டு சேர்க்கின்றோம்.
எங்கள் நிறுவனத்தின் ஊடாக பொதிகள்
அனுப்பும் ஒவ்வொரு வாடிக்கையாளர்களுக்கும்
பெறுமதியான பரிசில்கள் மற்றும்
அன்பளிப்புகள் காத்திருக்கின்றது.
அரச மற்றும் தனியார்
நிறுவனங்களுக்கு விசேட
விலைக்கழிவு.
வெளிநாடுகளில் இருந்து
அனுப்பப்படும் பொதிகளையும்
இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
TA PARCEL.LK | Main Street Karaithivu | taparcel.lk@gmail.com, +94774385151, +94752542651


உதயகுமார் கல்வி நிலையம்
UTHAYAKUMAR EDUCATION CENTER
உதயகுமார் கல்வி மையம்
வளர்ச்சியின் உச்ச நிலை கல்வி
முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923
n.uthayakumar1981@gmail.com


Aaran Ayurveda
& Wellness Massage
Stampfenbachstrasse-24, 8001 Zurich
Poststrasse-5, 3400 Burgdorf
Tel: 0041 43 243 60 66 | 0041 79 940 15 10
ஆயுள்வேத மூலிகை வைத்தியம் மூலம் (கேரளா)
சிகிச்சை அளிக்கப்படும். பழைய நோவாக இருந்தாலும்
நாங்கள் பூரண குணமடைய வைக்கின்றோம்.
சுவிஸ் நாட்டில் உள்ளவர்கள் மருத்துவ காப்புறுதி மூலம்
பணத்தைச் செலுத்தலாம். (Karankenkasse Anerkannt)
மேலதிகத் தொடர்புக்கு
Tel: 0041 43 243 60 66 | Whatsapp: 0041 79 940 15 10 (24 x 7)
www.aaranayurveda.ch


Restaurant
GRÜNAU
ITALY INDIAN THAI SRILANKA
Meier-Wiesen Str. 58
8064 Zürich
Montag - Sonntag
08:00 - 22:00
PIZZA NACH WAHL, TANDOORI, FISCH SPL
BBQ GRILL, BIRIYANI SPL., CURRY GERICHTE,
PARTYSERVICE.
Bestellung Number
044 260 2222
079 563 2222
www.restaurant-grunau.ch
info@restaurant-grunau.ch
Uber Eats
TWINT



MULTI CONSULTING
Versicherung & Finanz

# வீடு விற்பனைக்கு

வீடு வாங்க அல்லது வாங்கிய உங்கள் வீட்டை விற்க, வாடகைக்கு விட...

## MEHRFAMILIENHAUS + BAULAND ZU VERKAUFEN

**Objekt:**

- 1x 2-Zimmer Wohnung
- 1x 4.5-Zimmer Wohnung
- 1x 5-Zimmer Wohnung
- 2 Garagenparkplätze

Preis: **790.000 CHF**

Ort: 4254 Liesberg Dorf (BL)

Baujahr: 1850

Grundstück: 740 m2

சமூக அக்கறை எமது இலக்கு!

079 765 50 57
www.multiconsulting.ch

Tel: 044 860 12 05
info@multiconsulting.ch

Im Rietpark 5, 8180 Bulach.ZH,




# முச்சக்கரவண்டி ஓட்டுனர்களுக்கு கோவிட்-19 பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கி வைப்பு

(ரக்ஸனா)

முச்சக்கர வண்டியில் செல்லும் மக்களுக்கும், அதன் ஓட்டுனர்களுக்கும் இடையில் கொவிட்-19 பதவுதலைக் தடுக்கும் வகையிலும், கட்டுப்படுத்தும் வகையிலும், செலான் வங்கியின் களுவாஞ்சிகுடி கிளையால் களுவாஞ்சிகுடி பிரதேசத்தில் சேவையிலீடுபடுகின்ற முச்சக்கர வண்டி ஓட்டுனர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்கள் வியாழக்கிழமை(30) வழங்கி வைக்கப்பட்டன.

களுவாஞ்சிகுடி செலான் வங்கி கிளையில் வைத்து நடைபெற்ற இந்நிகழ்வில், அப்பகுதி பொதுசுகாதார பரிசோதகர் கே.இளங்கோ, செலான் வங்கியின் களுவாஞ்சிகுடி முகாமையாளர் வி.சஞ்ஜெயன், பிராந்திய முகாமையானர் முஹமட் றிஸ்வி குசைன், உள்ளிட்ட பலர் இதன் போது கலந்து கொண்டு அப்பகுதியில் சேவையிலீடுபடுகின்ற 100 முச்சக்கர வண்டி ஓட்டுனர்களுக்கு செலான் வங்கியின் நாமம் பொறிக்கப்பட்ட உரிய பாதுகாப்பு உபகரணங்களை வழங்கி வைத்தனர்.

# 36 வருட அரச சேவையிலிருந்து ஓய்வு பெறுகின்றார்

(தலவாக்கலை பி.கேதீஸ்)

நுவரெலியாவலய கல்வி பணிமனையின் ஆரம்பக் கல்விக்குப் பொறுப்பான உதவி கல்விப் பணிப்பாளர் தேசபந்து. சண்முகம் செல்வராஜா எதிர்வரும் 03.01.2022 திங்கட்கிழமை தமது 36 வருட அரச சேவையிலிருந்து ஓய்வு பெறுகின்றார். அம்பேவெல, வார்விக், மார்ட்டின் தோட்டத்தை பிறப்பிடமாகவும் கனபதி புரம் கொட்டக்கலையை வசிப்பிடமாகவும் கொண்ட இவர் ஆரம்பக் கல்வியை அம்பேவெல சிங்கள வித்தியாலத்திலும் இடைநிலைக் கல்வியை நுவரெலியா பரிசுத்தத் திரித்துவக் கல்லூரியிலும் உயர் கல்வியை புனித சவேரியார் கல்லூரியிலும் கற்றார். 1986ம் ஆண்டு களுநுனுக ஆசிரியராக நியமனம் பெற்ற இவர், அட்டன் டிக்கோயா டங்கல்ட் தமிழ் வித்தியாலயத்தில் ஆசிரியராக கடமையாற்றினார். அதன் பின்னர் நுவரெலியா கல்வி வலயத்தின் லிந்துல ஊவாக்கலை இலக்கம் 1 தமிழ் வித்தியாலயம், கந்தப்பளை சமர்ஹில் தமிழ் வித்தியாலயம், நுவரெலியா பிளக்பூல் சென்.அந்தனிஸ் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் அதிபராக கடமையாற்றிய இவர் 2005 ஆம் ஆண்டு கொத்மலை கல்வி வலயத்தின் ஆரம்பக்கல்விக்கு பொறுப்பான உதவி கல்விப் பணிப்பளராக நியமனம் பெற்றார். பின்னர் 2008 ம் ஆண்டு அங்கிருந்து நுவரெலியா கல்வி வலயத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்றார். அங்கு தொடர்ச்சியாக ஆரம்பக் கல்விக்குப் பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளராக சேவையாற்றிய இவர் எதிர்வரும் 03.01.2022 ஓய்வுபெறுகின்றார். மத்திய மாகாண கல்வி அமைச்சின் முன் பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவில் பாடத்திட்டம், ஏனைய ஆசிரியர் வளநூல்கள் தயாரிப்புக் குழுவின் வளவாளராகவும் நுவரெலியா மற்றும் தெல்தெனிய ஆசிரியர் தொழில் வாண்மை விருத்தி நிலையங்களில் ஆசிரியர் மொடியூல் கற்றல் பயிற்சிநெறியில் தாபன விதிக்கோவை, நிதிப் பிரமாணம், சுகாதாரமும் போசாக்கும், கல்விச் சட்டங்கள் போன்றப் பாடங்களுக்கான வளவாளராகவும், யுனிசப் நிறுவனம், டீ பீல்ட் நிறுவனம்,சயில்ட் பண்ட் நிறுவனம், வேல்ட் விசன் லங்கா, ரூம் டு ரீட் ஆகிய அரச சார்பற்ற நிறுவனங்களில் ஆரம்பக்கல்வி, முன்பிள்ளை அபிவிருத்திக் கல்வி, எட்லஸ் முறை கற்பித்தல், சிறுவர் உரிமை, சிறுவர் நேயப் பாடசாலை, கட்டாயக்கல்வி, எழுத்தறிவு விருத்தி போன்ற துறைக்கான வளவாளராகவும் செயற்பட்டுள்ளார் இவர். இதற்கு மேலாக நாட்டின் பல பாகங்களிலும் குறிப்பாக மாத்தளை, அநுராதபுரம், மாஹோ, குருணாகல், திருகோணமலை, கொழும்பு போன்ற பிரதேசங்களில் ஆரம்பக்கல்வி தொடர்பாக ஆசிரியர்களுக்கு பயிற்சிகள் வழங்கியுள்ளார் இவர். 2005 ம் ஆண்டு தேசிய மட்டத்தில் சிறந்த அதிபருக்கான வித்தியா கீர்த்தி ஸ்ரீ விருதினையும், 2021 ம் ஆண்டு இலங்கை நாட்டின் மூன்றாவது அதி உயர் விருதான தேசபந்து விருதினையும் இவர் பெற்றுள்ளார். அத்துடன் இவர் ஓர் அகில இலங்கை சமாதான நீதவான் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவர் அமரர் சண்முகம் மீனாட்சி தம்பதியினரின் புதல்வராவார்.

# கந்தளாயில் மக்களால் மடக்கி பிடிக்கப்பட்ட மலைப்பாம்பு

(எப்.முபாரக்)

திருகோணமலை மாவட்டத்தின் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பதினான்கு அடி நீளமான மலைப்பாம்பொன்றினை பிரதேச பொது மக்களினால் நேற்று(30) அதி காலை மடக்கி பிடிக்கப்பட்டுள்ளதாக கந்தளாய் பிராந்திய வன ஜீவராசி அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

கந்தளாய் நீதிவான் நீதிமன்ற பிரதேசத்தினை அண்மித்த பகுதியில் இவ்மலைப்பாம்பு பிடிக்கப்பட்டுள்ளதாக வன ஜீவராசி அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

அப்பகுதியில் இவ்மலைப்பாம்பு கடந்த இரண்டு நாட்களாக வந்து சென்றதை அபகுதியில் வசிப்போர் கண்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

மலைப்பாம்பினை பிரதேச பொது மக்கள்,இளைஞர்கள் ஒன்றினைந்து பிடித்து வனஜீவராசி அதிகாரிகளிடம் ஒப்படைத்ததாகவும், அப்பாம்பினை யால வனப்பகுதியில் விடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் வனஜீவராசி அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

# ௨0௨௨ ஆம் ஆண்டுக்கான மாதாந்த ஓய்வூதியக் கோடுப்பனவு பற்றிய விவரம்

(றாசிக் நபாயிஸ், மருதமுனை நிருபர்)

ஓய்வூதிய சுற்றறிக்கை இலக்கம் 05/2021 இன் பிரகாரம் ஓய்வூதிய திணைக்களத்தினால்

2022ஆம் ஆண்டுக்கான மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவு பற்றிய விவர சுற்றறிக்கை பொதுத் திறைசேரியின் இணக்கப்பாட்டுடன் வெளியிடப்பட்டுள்ளன என ஓய்வூதியத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் எ.ஜகத்.டி.டயஸ் தெரிவித்துள்ளார்.

அதன் பிரகாரம் 2022 ஆம் ஆண்டிற்கான மாதாந்த ஓய்வூதிய கொடுப்பனவுகள் பின்வரும் திகதிகளில் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தை-07ஆம் திகதி வெள்ளிக்கிழமை,
மாசி-10ஆம் திகதி வியாழக்கிழமை,
பங்குனி-10ஆம் திகதி வியாழக்கிழமை
சித்திரை-08ஆம் திகதி வெள்ளிக்கிழமை
வைகாசி-10ஆம் திகதி செவ்வாய்க்கிழமை
ஆனி-10ஆம் திகதி வெள்ளிக்கிழமை
ஆடி-08ஆம் திகதி வெள்ளிக்கிழமை
ஆவணி-10ஆம் திகதி புதன்கிழமை
புரட்டாதி-09ஆம் திகதி வெள்ளிக்கிழமை
ஐப்பசி-06ஆம் திகதி வியாழக்கிழமை
கார்த்திகை-10ஆம் திகதி வியாழக்கிழமை
மார்கழி-09ஆம் திகதி வெள்ளிக்கிழமை.

# கிணறுகளில் மீன் இடும் நிகழ்வுகள்

(காரைதீவு குறூப் நிருபர் வி.ரி.சகாதேவராஜா)







காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவில் டெங்கு நுளம்புகளின் பெருக்கத்தை கட்டுப்படுத்தும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுவருகிறது.

காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தஸ்லீமா வசீர் தலைமையில் இத்திட்டம் கிரமமாக பிரிவுதோறும் முன்னெடுக்கப்பட்டுவருகிறது.

இதன்படி நேற்று காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினால் காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவில் உள்ள கிணறுகளில் மீன் இடும் நிகழ்வுகள் இடம்பெற்றது.

இப்பிரிவிலுள்ள சில வீடுகளில் உள்ள கிணறுகளில் டெங்கு குடம்பிகள் காணப்பட்ட கிணறுகளை இனங்கண்டு மீன்கள் இடப்பட்டதுடன்.டாக்டர் தஸ்ஸீமா வசீர் பொது சுகாதார பரிசோதகர்கள் அதிகாரிகளால் இப்பிரதேச பொதுமக்களுக்கு டெங்கு நுளம்பு தொடர்பான அறிவுரைகளும் வழங்கப்பட்டது.

மேலும் இவ்வேலைத்திட்டத்தில் சுகாதார வைத்திய அதிகாரிபொது சுகாதார பரிசோதனையாளர்கள் நுளம்பு கள தடுப்பு பிரிவினர்கள் ஆனுவுகு பலரும் கலந்து கொண்டனர் வேலைத்திட்டத்தை முன்னெடுத்தனர்.

# கணக்காய்வு விசாரணைகளிலிருந்து ஏறாவூர் நகர சபையை விடுவிக்க வேண்டும் ஏறாவூர் நகர சபையின் 45வது கூட்டத் தொடரில் ஏகமனதான தீர்மானம்





(ரக்ஸனா)

நாடாளுமன்ற பொதுக் கணக்காய்வுக் குழு, மத்திய கணக்காய்வுக் குழு ஆகியவற்றில் ஏறாவூர் நகர சபைக்காக மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திகள் தொடர்பாக இடம்பெறுகின்ற முறைப்பாடுகளை முடிவுக்குக் கொண்டு வந்து ஏறாவூர் நகர சபையை விசாரணை பட்டியலிலிருந்து விடுவிக்க வேண்டும் என ஏகமனதான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக அச்சபையின் தவிசாளர் எம்.எஸ். நழிம் தெரிவித்தார்.

வியாழக்கிழமை 30.12.2021 ஏறாவூர் நகர சபையின் தவிசாளர் எம்.எஸ். நழிம் தலைமையில் இடம்பெற்ற அச்சபையின் 45வது அமர்வில் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஏறாவூர் நகர சபையின் நவீன கட்டிடம் அதன் அருகிலமைந்துள்ள நவீன நூலகத்துக்கான கட்டிடம் ஆகியவற்றின் நிர்மாண வேலைகளில் ஊழல்கள் இடம்பெற்றதாக நாடாளுமன்ற பொதுக் கணக்காய்வுக் குழு, மத்திய கணக்காய்வுக் குழு ஆகியவற்றிற்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து கடந்த பல வருடங்களாக அந்த நவீன கட்டிட நிருமாணப் பணிகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதோடு ஏறாவூர் நகர சபையினால் எந்தவொரு அபிவிருத்திப் பணிகளையும் செய்ய முடியாத சூழ்நிலையுள்ளது.

எனவே இந்த இக்கட்டான நெருக்கடி நிலையிலிருந்து ஏறாவூர் நகர சபையை விடுவிக்க வேண்டும். இதன் மூலம் ஏறாவூர் நகர சபைக்கு ஏற்பட்டிருக்கும் அவப்பெயரைப் போக்க உடனடியாக வழிவகை கண்டாகப்பட வேண்டும்.

முறைப்பாடுகளில் தெரிவிக்கப்பட்டதுபோன்று ஏறாவூர் நகர சபைக்காக மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்களில் ஊழல்கள் இடம்பெற்றிருக்குமாயின் அதனை வருடக்கணக்கில் இழுத்தடிக்காது உடனடியாக கண்டறியுமாறும் ஏறாவூர் நகர சபை கேட்டுக் கொள்கின்றது.

கோப் குழு விசாரணை என்ற பெயரில் இருக்கும் ஏறாவூர் நகர சபையின் நாமம் ஏறாவூரின் ஒட்டுமொத்த அபிவிருத்திக்குமே பெருந் தடையாக இருந்து வருகின்றது.

எனவே, இந்த விடயம் உடனடியாக கவனத்தில் எடுக்கப்பட வேண்டும் என்று சபை ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

# தேசவழமைச் சட்டங்களை நீக்குவதே ஞானசார தேரர் தலைமையிலான செயலணியின் பிரதான இலக்கு

## வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ்

( வாஸ் கூஞ்ஞ)

ஞானசார தேரர் தலைமையிலான செயலணியின் பிரதான இலக்கு ஞானசரார் யாழ்ப்பாணம் வந்து ஒரு சிலரிடம் குறிப்பாக கோட்டா சார்பான கட்சியின் பிரதிநிதிகளுடன் ஒரு நாடு ஒரு சட்டம் தொடர்பாக கருத்துக்களை முன்வைக்கும் போது தேசவழமைச் சட்டங்கள் உள்வாங்கப்படும் என்ற வெற்று அறிக்கை மூலம் தமிழர்களை ஏமாற்றுவதற்காக கூறினாரே தவிர உண்மையாக தேசவழமைச் சட்டங்களை நீக்குவதே அவர்களது எண்ணம் என வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் தனது அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில்

இலங்கைத்தீவில் சட்டரீதியாக முதல் இறைமையைக் கொண்ட தமிழர்களின் மிகப் பெரும் ஆதாரமாக விளங்கும் தேசவழமைச் சட்டங்களை சட்ட அங்கிகாரம் இல்லாது அழிப்பதற்கு பாரிய சட்ட ரீதியான நடவடிக்கையை ஜனாதிபதி கோட்டாபய அவர்கள் ஒரு நாடு ஒரு சட்டம் என்ற செயலணி மூலம் மேற் கொள்ள சதித் திட்டம் போட்டுள்ளார்.

ஒரு நாடு ஒரு சட்டம் இலங்கைத் தீவில் சிறிய எண்ணிக்கையில் வாழும் இனங்களுக்கு பாதகமாக அமையும் என்ற பொதுவான நிலைப்பாடு இருந்தாலும் இதன் பாரிய தாக்கம் வடக்கு கிழக்கை பூர்வீக வாழ்விடமாக கொண்ட தமிழர்களையே குறி வைத்துள்ளது காரணம் ஐரோப்பியர் வருகைக்கு முன்னர் இலங்கையின் தலைநகர் வடக்கை தளமாக கொண்ட சிங்கை மன்னர்களான தமிழர்களாலே நிர்வகிக்கப்பட்டது அவர்களின் கால சட்டங்களே தேசவழமை சட்டங்கள் என தற்போதும் வடக்கில் முதன்மையானவையாக விளங்குகின்றன.

ஆரம்பத்தில் இலங்கையில் கண்டியை மையமாக கொண்ட கண்டியச் சட்டங்களை சிங்களவரும் வடக்கு யாழ்ப்பாண ராசதானியை மையமாக கொண்ட தமிழர்கள் தேசவழமைச் சட்டங்களையும் கொண்டிருந்த இரு தேசங்கள் இருந்தன. இதன் அடிப்படையில் தான் தமிழர் தேசம் தங்களுக்குரிய நாட்டுச் சட்டங்களை தேசவழமைச் சட்டங்கள் என அழைத்தனர் இதுதான் தமிழர்கள் இந்த நாட்டின் இறைமை உள்ள இனம் என்பதற்கு மிகப் பெரும் ஆதாரம் ஆகும்.

தேசவழமைச் சட்டங்கள் ஒல்லாந்தர் காலத்தில் டச்சுச் சட்டங்களுடன் தனித்துவமாக தமிழ் முதலிமாரால் தொகுக்கப்பட்டு வடக்குத் தமிழர்கள் இலங்கையில் எப்பகுதியில் வாழ்ந்தாலும் அவர்களுக்கு தேசவழமைச் சட்டம் ஏற்புடையது என அங்கிகாரம் வழங்கினர் இதனை பிரித்தானியரும் தமது கோல்புறுக் அரசியலமைப்பின் ஊடாக அங்கிகாரம் வழங்கினர் .

இலங்கைத் தமிழர்கள் இறைமை உள்ள இனம் என்பதை ஆதாரமாகக் கொண்ட தேசவழமைச் சட்டங்களை இல்லாது ஒழிப்பதே ஞானசார தேரர் தலைமையிலான செயலணியின் பிரதான இலக்கு ஞானசார் யாழ்ப்பாணம் வந்து ஒரு சிலரிடம் குறிப்பாக கோட்டா சார்பான கட்சியின் பிரதிநிதிகளுடன் ஒரு நாடு ஒரு சட்டம் தொடர்பாக கருத்துக்களை முன்வைக்கும் போது தேசவழமைச்சட்டங்கள் உள்வாங்கப்படும் என்ற வெற்று அறிக்கை ஒன்றை தமிழர்களை ஏமாற்றுவதற்காக கூறினாரே தவிர உண்மையாக தேசவழமைச் சட்டங்களை நீக்குவதே அவர்களது எண்ணம் இவர்களை புரிந்த யாரும் மறுக்க மாட்டார்கள்.

ஜனாதிபதி கோட்டாபய அவர்களின் செயலணி ஒரு போதும் கண்டியச் சட்டத்தில் எந்த மாற்றங்களையும் செய்ய மாட்டார்கள் ஆகவே அவர்களது பிரதானா நோக்கம் தமிழர்களை இறைமை அற்ற இனமாக மாற்றுகின்ற பாரிய தமிழின அழிப்பாகும்.

தொடர்ச்சியாக 1956 இல் இருந்து 2009 வரை பாரிய தமிழ் இனப் படுகொலைகளை செய்த சிறிலங்கா ஆட்சியாளர்கள் தமிழர்களது கலாசாரத்தையும் இல்லாதொழித்து பௌத்த மயமாக்கலை இன்றுவரை தமது நிகழ்ச்சி நிரலாக தீவிரப்படுத்தியுள்ளனர் இறுதியாக எஞ்சிய சட்ட ரீதியான இறைமைக்குரிய ஆதாரமான தேசவழமைச் சட்டங்களையும் அழித்து இறைமை அற்ற இனமாக தமிழர்களை மாற்றி சிங்களவர்களுக்கு மட்டும் உரித்தான ஒரு நாடு ஒரு சட்டம் என்ற புதிய அரசியலமைப்பை உருவாக்கும் பாரிய சதியில் கோட்டாபய ராஜபக்ச அரசாங்கம் தீவிரமாக இறங்கியுள்ளது என இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சுபீட்சம்
SUPEEDSAM
EVERYTHING FOR PEOPLE
நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

# தை மாதம் முதல் சுபீட்சம் மின்னிதழ் வாரம் தோறும் உங்கள் பார்வைக்கு

செய்திகளை
உடனுக்குடன்
தெரிந்து கொள்ள
சுபீட்சம்
இணையத்தளத்திற்கு செல்க

www.supeedsam.com